தினமணி

ரூ.105 கோடி செலவில் 1,166 தானிய சேமிப்புக் கிடங்குகள்: முதல்வர்

First Published : 26 Aug 2011 01:22:02 AM IST

Last Updated : 26 Aug 2011 04:21:04 AM IST



சென்னை, ஆக.25: தமிழகத்தில் ரூ.105 கோடி செலவில் 1,166 தானிய சேமிப்பு கிடங்குகள் கட்ட முடிவு செய்யப்பட்டுள்ளதாக முதல்வர் ஜெயலலிதா அறிவித்தார்.

இதன்மூலம், 1 லட்சத்து 55 ஆயிரத்து 300 மெட்ரிக் டன் அளவுக்கு கூடுதல் சேமிப்பு வசதி ஏற்படுத்தப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

பேரவை விதி 110-ன் கீழ் இதுதொடர்பாக முதல்வர் ஜெயலலிதா தெரிவித்தது:

தமிழகத்தில் வேளாண்மைத் தொழிலுக்குப் புத்துயிர் ஊட்டி, உற்பத்தித் திறனை மேம்படுத்துவதன் மூலம் இரண்டாம் பசுமைப் புரட்சிக்கு வித்திட அரசு உறுதி பூண்டுள்ளது. இந்த ஆண்டு உணவு தானிய உற்பத்தியில் 115 லட்சம் மெட்ரிக் டன் என்ற உயர் இலக்கினையும் இந்த அரசு நிர்ணயித்துள்ளது.

வேளாண் விளை பொருள்களுக்கு நியாயமான விலை கிடைத்து, விவசாயிகளின் தனி நபர் வருமானம் உயரும் வகையில் அரசு திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்திவருகிறது. விவசாயிகள், தாங்கள் விளைவிக்கும் பொருள்களுக்கு நல்ல விலை கிடைக்கும் வரையில், அவற்றை சேமித்து வைக்க வேண்டியதன் அவசியத்தை அரசு நன்கு உணர்ந்துள்ளது.

இப்போது மாநிலத்தில் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் ஆகியவற்றில் மொத்தமாக 8 லட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவில் சேமிப்பு கிடங்கு வசதி உள்ளது.

வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் விவசாய விளைப் பொருள்களுக்கு ஈடாக தானிய ஈட்டுக் கடன்களை வழங்கி வருகின்றன. அறுவடைக் காலங்களில் வேளாண் விளைப் பொருள்களின் விலை வீழ்ச்சி அடையும்போது, விவசாயிகள் தங்கள் விளைப் பொருள்களை கிடங்கில் 1 முதல் 2 மாதங்கள் வரை சேமித்து தானிய ஈட்டுக் கடன் பெற்றுக்கொள்கின்றனர்.

விலை ஏற்றத்தின் போது விளைப்பொருள்களைக் கிடங்கில் இருந்து எடுத்து நல்ல விலைக்கு விற்கின்றனர். இதனால் விவசாயிகளுக்கு 10 முதல் 30 சதவீதம் வரை அதிக விலை கிடைக்கிறது.

ரூ.185 கோடி தானிய ஈட்டுக் கடன்: நடப்பு ஆண்டில் ரூ.185 கோடி தானிய ஈட்டுக் கடன் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் தானிய ஈட்டுக் கடன் வழங்குவதற்கு அதிக வாய்ப்புகள் உள்ளன. கூட்டுறவுத் துறையில் தற்போது உள்ள கிடங்குகளின் பயன்பாடு அதிக அளவில் உள்ளதால் மாநிலத்தில் கிடங்கு வசதியினை விரிவுப்படுத்துவது உடனடித் தேவையாக உள்ளது.

புதிய கிடங்குகள்: மாநிலத்தின் தேவையைக் கருத்தில் கொண்டு, நபார்டு வங்கியின் ஊரகக் கட்டமைப்பு மேம்பாட்டு நிதித் திட்டத்தின் கீழ் கடன் உதவி பெற்று மொத்தம் ரூ.105 கோடியே 47 லட்சம் செலவில் மாநிலம் முழுவதும் புதிய கிடங்குகள் கட்டப்படும்.

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்களில் 100 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 1,118 கிடங்குகளும், 21 வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் 500 மெட்ரிக் டன் கொள்ளளவு கிடங்குகளும், 21 வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் 1,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்குகளும், 6 வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் 2,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்குகளும் ஆக மொத்தம் 1,166 கிடங்குகள் கட்ட அரசு முடிவு செய்துள்ளது.

இதன்மூலம், லட்சத்து 55 ஆயிரத்து 300 மெட்ரிக் டன் அளவுக்கு கூடுதல் சேமிப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும். இதன்மூலம் தானிய சேமிப்பு இழப்பு குறைக்கப்படுவதுடன், தானிய ஈட்டுக் கடன் வசதியும் அதிகரிக்கப்படுகிறது. விவசாயிகளுக்கு ரூ.26 கோடியே 40 லட்சம் அளவுக்கு கூடுதல் வருவாய் கிடைக்க வாய்ப்பு ஏற்படும் என முதல்வர் தெரிவித்தார்.

**பப்பாளி மாவுப் பூச்சிகளை கட்டுப்படுத்த வலியுறுத்தல்**

First Published : 25 Aug 2011 11:36:14 AM IST

ஈரோடு, ஆக.24: பஞ்சு அசுவனி நோய்த் தாக்குதலைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று, கீழ்பவானி பாசன விவசாயிகள் சங்கம் வலியுறுத்தி உள்ளது.

பாசன சங்கத் தலைவர் செ.நல்லசாமி தெரிவித்தது:

பார்த்தீனிய செடிகளை அழிக்க அரசு உத்தரவிட்டுள்ளது. இந்த செடிகளை விட அதிகம் நாசம் விளைவித்து வரும் வெள்ளைப் பஞ்சு அசுவனி பூச்சித் தாக்குதலையும் கட்டுப்படுத்த வேண்டும்.

வெள்ளைப் பஞ்சு அசுவனி பூச்சிகள் காற்றின் மூலமாக வேகமாகப் பரவி வருவதால் பயிர்கள் பாதிக்கப்படுகின்றன. ஆரம்பத்தில், இந்நோய் பப்பாளி மரத்தை மட்டுமே தாக்கி வந்தது. பின்னர், கொய்யா செடியைத் தாக்கியது. இப்போது இந்த நோய் தாக்காத பயிர்களே இல்லை என்ற நிலை ஏற்பட்டு விட்டது.

இந் நோயைக் கட்டுப்படுத்தவும், அழிக்கவும் வேளாண் பல்கலைக்கழகம் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

அரசு தற்போது பார்த்தீனிய செடிகளை அழித்து வருகிறது. இதற்காக செலவிடும் தொகையில் பஞ்சு அசுவனி பூச்சியையும் அழிக்க வேண்டும்.

**பார்த்தீனிய செடி ஒழிப்பு முகாம்**

First Published : 25 Aug 2011 11:37:04 AM IST

கோபி, ஆக.24: தூக்கநாயக்கன்பாளையம் வட்டாரம், பேட்டைக்கரை கிராமத்தில் பார்த்தீனியம் ஒழிப்பு முகாம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

வேளாண்மைத் துறை துணை இயக்குநர் கார்த்திகேயன் பேசுகையில், கையுறை அணிந்து, பூக்கும் முன்னர் செடிகளை அப்புறப்படுத்தி அழிக்க வேண்டும். பயிர் சாகுபடி நிலங்களில் அட்ரசின் களைக்கொல்லியையும் தெளித்துக் கட்டுப்படுத்தலாம். சாகுபடி இல்லாத நிலங்களில் பூக்கள் தோன்றும் முன் 24 டி (ஏக்கருக்கு 2 கிலோ) பாரகுவாட் கிளைப்போசேட் போன்ற களைக் கொல்லிகளை பார்த்தீனிய செடிகள் மீது தெளித்து அழிக்கலாம்.

குறைந்த செலவில் 20 சதம் உப்புக்கரைசலை (100 லிட்டர் தண்ணீரில் 20 கிலோ சமையல் உப்பு) தெளித்தும் அழிக்கலாம் என்றார்.

இதில் மாணவ, மாணவியர், விவசாயிகள் கலந்து கொண்டு கருத்துகளை பரிமாறிக் கொண்டனர். உப்புக்கரைசலை தெளிப்பான் மூலம் தெளித்து செயல்விளக்கம் செய்து காட்டப்பட்டது. வேளாண்மை அலுவலர் சரோஜா, உதவி வேளாண்மை அலுவலர்கள் உடனிருந்தனர்.

**"உணவெனப்படுவது நிலத்தொடு நீரே'**

ஆர். நல்லகண்ணு

First Published : 26 Aug 2011 01:32:01 AM IST

தினமணி (3.8.2011) இதழ் "வாசகர் அரங்கம்' பகுதியில் வெளியான இருபது கடிதங்களையும் படித்தேன். தமிழ்நாட்டின் ஆறுகளிலிருந்து மணல் கொள்ளை போகும் அவலங்களைக் கண்டு வாசகர்கள் தங்களின் ஆதங்கத்தை வெளிப்படுத்தியிருந்தார்கள்.

÷""சாயப்பட்டறை பிரச்னையில் முதல்வர் நேரடி கவனம் செலுத்தியதைப்போல், மணல் கொள்ளையையும் தடுத்து நிறுத்த உறுதியான ஆக்கப்பூர்வமான நேரடி நடவடிக்கைகளை எடுத்தால் மணல் கொள்ளை கட்டுக்குள் வரலாம்" என்று ஒருவர் எழுதியிருந்தார்.

÷தமிழ்நாட்டில் 33 ஆற்றுப் படுகைகள் உள்ளன. அத்தனை படுகைகளிலும் கடந்த பத்தாண்டுகளாக அளவுக்கு அதிகமான ஆற்று மணல் அள்ளப்பட்டு விட்டது. உயிர்ப் பிராணிகள் சில கொடூர மிருகங்களால் கடித்துக்குதறிச் சிதறிக் கிடப்பதைப் போல அழகான ஆற்றுப் படுகைகள் குண்டும் குழியுமாகக் காணப்படுகின்றன. தேவைக்கும் மாறாக அதிக லாபத்துக்கு விற்கப்படும் பொருளாகக் கருதப்படுவதால் சட்ட விதிகள் மீறப்படுகின்றன.

÷சட்ட விதிகள்:

÷1. அரசின் சட்ட விதிகளின்படி மணல் என்பது சிறு கனிமமாகக் கருதப்படுகிறது. ஆற்றின் கரைகளிலிருந்து உள்புறமாக 50 மீட்டர் பாதுகாப்பு இடைவெளிவிட்டே மணல் குவாரி அமைக்கப்பட வேண்டும்.

÷2. ஆற்றின் மேல்பரப்பிலிருந்து 1 மீட்டர் ஆழம் வரை மட்டுமே மணல் எடுக்கப்பட வேண்டும்.

÷3. 1959-ம் ஆண்டு தமிழ்நாடு சிறுகனிம சலுகை விதி 36ஏ(6)ன் படி குவாரி செய்யும் பணிக்கு எந்திரங்களைப் பயன்படுத்தக் கூடாது. அரசின் அனுமதி பெற்ற பின்னரே கனரக எந்திரங்களைப் பயன்படுத்த வேண்டும்.

÷4. ஆற்றின் இயற்கையான நீர்ப்போக்கில் மாற்றம் ஏற்படா வண்ணமும், ஆற்றின் கரைகளுக்கு எந்தவிதப் பாதிப்பும் ஏற்படா வண்ணமும் மணல் எடுக்க வேண்டும்.

÷5. மேற்படி பகுதியில் மணல் எடுப்பதன் மூலம் பொதுமக்களுக்கு எந்தவிதமான இடையூறும் இல்லாமல் மணல் எடுக்க வேண்டும்.

÷6. தமிழ்நாடு குடிநீர் வாரியத்தால் பராமரிக்கப்படும் நீர் ஆதார அமைப்புகளுக்கு விதிகளின்படி 500 மீட்டர் சுற்றளவு கொண்ட குறைந்தபட்ச பாதுகாப்பு இடைவெளி கண்டிப்பாக விடப்பட வேண்டும். எக்காரணம் கொண்டும் மேற்படி நீர் ஆதார அமைப்புகளுக்கு விடப்படும் பாதுகாப்பு இடைவெளிப் பகுதியில் மணல் குவாரி செய்யக் கூடாது.

÷7. மணல் எடுக்கும்போது சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்படா வண்ணம் மணல் எடுக்க வேண்டும்.

÷8. காலை 8 முதல் மாலை 6 மணி வரைதான் மணல் எடுக்க வேண்டும்.

÷9. ஒரு லோடு மணலுக்கு ரூ.200 கட்டணமாகவும், வரி ரூ.26-ம் கட்ட வேண்டும்.

÷மேற்படி இவ்விதிகளை மீறாமலிருக்க மாதம் ஒருமுறை சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர் தலைமையில் பொதுப்பணித் துறை நிர்வாகப் பொறியாளர், மண்ணியல் அதிகாரி மற்றும் பல்துறை அதிகாரிகள் கூட்டம் நடைபெறும். தவறு நடந்தால் கண்காணிக்கும், முறைப்படுத்தும் பொறுப்பு இவர்களுடையது என அரசின் விதிமுறைகள் அறிவுறுத்துகின்றன.

÷இத்தனை விதிகளும் காவல் கண்காணிப்புகளும் இருந்தாலும் தடையின்றி மணல் கொள்ளை நடந்து வருகிறது. தோட்டக் காவல்காரனும் கொள்ளைக்காரனும் இணைந்துவிட்டால் விடியவிடியக் கொள்ளை அடிக்கலாம் என்பது நாட்டு வழக்கு.

÷சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரைக் கிளையில் 2010 அக்டோபரில் தாமிரபரணி மணல் கொள்ளையை எதிர்த்து பொதுநல வழக்குத் தொடரப்பட்டது.

மதுரை நீதிமன்றத்தின் அறிவுரைப்படி நிபுணர்குழு அமைக்க உத்தரவிடப்பட்டது. புவியியல் ஆய்வாளர், நீதிமன்றப் பதிவாளர், சுற்றுச்சூழல் ஆய்வாளர் ஆகியோரைக் கொண்ட குழு அமைக்கப்பட்டது.

÷நீதிபதி பானுமதி, நீதிபதி நாகமுத்து ஆகியோர் வழிகாட்டுதலின்படி அமைக்கப்பட்ட அக்குழு பாதிக்கப்பட்ட தாமிரபரணி மணற்கொள்ளைப் பகுதிகளை நேரடியாக ஆய்வுசெய்து ஆய்வறிக்கையை நீதிமன்றத்தில் சமர்ப்பித்தது.

÷அந்த அறிக்கையின்படி தாமிரபரணி ஆற்றுப்படுகையின் மேலே உள்ள மணல் மட்டும் எடுக்கப்படவில்லை, மாறாக, மிக ஆழமாக, அகலமாக மணல் தோண்டி எடுக்கப்பட்டிருந்தது என்றும், இதனால் ஆங்காங்கே பெரும் பெரும் பள்ளங்கள் காணப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஏற்கெனவே நிர்ணயிக்கப்பட்டிருந்த விதிகளுக்கு மாறாக மணல் கொள்ளை அடிக்கப்பட்டிருக்கிறது. நதி முழுவதும் மேடுபள்ளங்களாக ஆக்கப்பட்டு பள்ளங்களில் தண்ணீர் தேங்கி, செயற்கை நீர்த் திட்டுகள் போன்று காணப்பட்டன.

÷இயற்கை ஊற்றுகள் அழிக்கப்பட்டிருந்தன. இனிவரும் 5 ஆண்டுகளுக்கு இந்தப் பகுதிகளில் மண் எடுக்க அனுமதிக்கக்கூடாது. நெறிமுறைகளுக்கும் விதிமுறைகளுக்கும் மாறாக 3 அடிக்கு மேலும் ஆழமாகத் தோண்டப்பட்டு மணல் எடுக்கப்பட்டிருக்கிறது என்றெல்லாம் அந்த நிபுணர்குழு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. அந்த அறிக்கையை நீதிமன்றமும் ஏற்றுக்கொண்டது.

÷மணற் குவாரிகளில் பொக்லைன் எந்திரங்கள் பயன்படுத்தப்படுவதைத் தடை செய்வதாகவும் இதற்கான விதிமுறைகளை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் நீதிமன்றம் தனது தீர்ப்பில் உறுதிபடத் தெரிவித்திருந்தது.

÷இந்தத் தீர்ப்பை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று லாரி உரிமையாளர்கள் மேல் முறையீடு செய்து கொண்டதற்கு இணங்க, மேற்படி தீர்ப்பைத் தாற்காலிக அனுமதியுடன் செயல்படுத்த நீதிமன்றம் உத்தரவிட்டது. உடனடியாக சில மணற்குவாரிகள் மூடப்பட்டனவே தவிர, குறிப்பிட்ட இடங்களைத் தவிர மற்ற இடங்களில் எப்போதும் போல மணல் அள்ளப்படுவது குறைந்ததாகத் தெரியவில்லை.

÷2010-ம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் அளிக்கப்பட்ட நீதிமன்றத் தீர்ப்பு முறையாக நடைமுறைப்படுத்தவில்லை. உயர் நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் ஓய்வுபெற்ற நீதிபதி பத்மநாபன் தலைமையில் அமைக்கப்பட்ட மாநில அமைப்பு செயல்பட, மாநில அரசு நடவடிக்கை

எடுக்க வேண்டுமென்று நீதிபதி ஜோதிமணி (ஜூலை முதல் வாரத்தில்) ஒரு தீர்ப்பில் தெரிவித்திருக்கிறார்.

÷தமிழ்நாடு நீங்கலாக மற்ற மாநிலங்களில் எல்லாம் பொக்லைன் எந்திரம் பயன்படுத்துவதைத் தடை செய்துள்ளனர். கேரளத்தில் 2001-ம் ஆண்டிலிருந்தும் ஆந்திரம், மகாராஷ்டிரத்தில் 2006-ம் ஆண்டிலும் பொக்லைன் எந்திரத்தின் மூலம் மணல் அள்ளுவது தடை செய்யப்பட்டுள்ளது.

÷தாமிரபரணி நதியில் மணல் அள்ளும் நடவடிக்கைகளுக்கு உயர் நீதிமன்றம் தடைவிதித்த பின்னர், பாலாற்றிலும் மணல் அள்ளுவதற்குத் தடைவிதித்துத் தமிழக அரசு உத்தரவிட்டது.

÷தாமிரபரணி, பாலாறு மட்டுமன்றி தமிழ்நாட்டில் மணல் கொள்ளை போகும் முக்கிய நதிகளான காவேரி, பவானி, அமராவதி மற்றும் பெண்ணை ஆற்றுக்கரைகளிலும் மணல் அள்ளத் தடை மற்றும் கட்டுப்பாடுகளைத் தமிழக அரசு கொண்டு வரவில்லை.

÷தாமிரபரணி வழக்கில் அனுமதிக்கப்பட்ட மணல் எடுப்பு என்பது 6 மாதத்துக்கு 54,417 யூனிட் அளவுதான். ஆனால், ஒரே மாதத்திலேயே 65,000 யூனிட் அளவிலான மணல் எடுக்கப்பட்டிருக்கிறது. இதனை பொக்லைன் எந்திரத்தைக் கொண்டுதான் எடுத்திருக்க முடியும். ஆனால், அரசுத் தரப்பில் ஆஜரான வழக்குரைஞர், வெறும் 1,758 யூனிட் அளவில் தான் தாமிரபரணியில் மண் எடுக்கப்பட்டுள்ளது என நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

÷ஒரு டிப்பர் லாரியில் 100 கன அடி மணல் ஏற்றலாம். மணல் பாடி லாரிகளில் ஒன்றரை யூனிட் வரை ஏற்றலாம். ஒரு நாளைக்குக் குறைந்தது 5 முதல் 6 யூனிட் வரை மணல் நிரப்பிக் கொண்டிருக்கின்றன, மெகா டிப்பர் எனப்படும் மணல் லாரிகள். ஆனால், அரசுக்கு 1 லாரி மணல் என கணக்குக் காண்பித்து 1 யூனிட் அளவு மண்ணுக்கு மட்டுமே பணம் தந்து விட்டுச் செல்கிறார்கள்.

÷மணல், மக்களின் தேவைப் பொருளாக இருக்கிறது. கட்டுமான அமைப்புகளுக்கு அடிப்படையானதாக இருந்து வருகிறது. இந்த ஆற்று மணல் தமிழ் மாநிலத்தில் கட்டட வேலைகளுக்காக மட்டும் பயன்படுத்துவதைவிட, வெளி மாநிலங்களுக்கும் பிற வெளி நாடுகளுக்கும் கடத்திக் கொண்டுபோய் விற்று வந்தார்கள். மணல் இவ்வாறு ஏற்றுமதிப் பொருளாக மாறியதுதான் மணல் கொள்ளைக்குக் காரணமாக இருக்கிறது.

÷வெளிநாட்டு வர்த்தக அமைப்பின் இயக்குநர் செயலகத்தின் அறிக்கையின்படி மாலத் தீவுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட மணல் அளவு 2008-2009-ம் ஆண்டுகளில் 5.5 லட்சம் டன்னாக இருந்தது. இது 2009-2010-ம் ஆண்டுகளில் 10.5 லட்சம் டன்னாக உயர்ந்தது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

÷வெளிநாட்டுக்குக் கடத்தப்படும் இத்தகைய சட்டப்பூர்வ நடவடிக்கைகளால் நமது நாட்டின் இயற்கை வளமும் சுற்றுச்சூழல் வளமும் வெகுவாகப் பாதிப்புக்கு உள்ளாகின்றன.

÷இத்தகைய மணல் கொள்ளைகளால் நிலத்தடி நீர்மட்டம் குறைகிறது. ஆற்றின் போக்கும் மாறுகிறது. ஆக்கிரமிப்புக்கு உள்ளாகின்றன. நாளாவட்டத்தில் நீர் வழித்தடங்கள் அழிக்கப்படுகின்றன.

÷அரசின் கூட்டுக் குடிநீர்த் திட்டங்களுக்காக ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப்படுவதாலும், நீர்மட்டம் குறைந்து போகிறது. தொழிற்சாலை பயன்பாடுக்கான ஏற்பாடுகளும் ஆற்று நதி நீரின் பெரும்பங்கை உறிஞ்சி எடுத்து விடுகின்றன.

÷ஆற்று மணல் என்பது வெறும் கனிமப் பொருள் மட்டும் அல்ல. அது நீரைச் சுத்தப்படுத்தி நீரைச் சேமித்து வைக்கும் இயற்கை சுத்திகரிப்பு சேமிப்புக் கலன். அது செடி கொடிகள் மற்றும் பல் உயிர்களையும் பாதுகாப்பதாகும்.

÷தமிழ்நாட்டில் நமது முன்னோர்கள் விளைநிலங்களைப் பாதுகாத்தார்கள். விவசாயத்துக்கான நீரைப் பெறுவதற்காக ஆற்றைப் பராமரித்தார்கள். கரைகளைச் சீரமைத்தார்கள். குடிமராமத்துப் பணிகளை முறையாக காலாகாலத்தில் நிறைவேற்றி வந்தார்கள். ஆறு, குளங்கள் கரைகளைப் பாதுகாப்பதற்கும் மதகுகளைப் பராமரிப்பதற்கும் கரைக்காவலர்கள், லஸ்கர்கள் நியமிக்கப்பட்டு வந்தார்கள்.

÷மணற் பரப்பினை "தொட்டனைத்து ஊறும் மணற் கேணி' என்றும், இத்தகைய மணற் கேணிகளில் சேமிக்கப்பட்டு வரும் நீரை "நீரின்றி அமையாது உலகு' என்றும் திருக்குறள் வலியுறுத்துகிறது.

÷"உணவால் விளைந்தது உடம்பு. உணவெனப்படுவது நிலத்தொடு நீரே' என புறநானூற்று பாடல் அறிவித்துள்ளது.

÷தமிழக அரசின் 2011-2012-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் ஆறுகளில் தடுப்பணைகள் கட்டி நிலத்தடி நீரைப் பாதுகாப்பதென்றும், பாசன வசதிகளைப் பெருக்குவதென்றும் திட்டமிட்டிருப்பது வரவேற்கத்தக்கதாகும்.

இத்திட்டங்கள் சரியாக நிறைவேற்றப்பட வேண்டுமென்றால் மணல் கொள்ளையைத் தடுக்க வேண்டும். கட்டுமான நடவடிக்கைகளுக்கு மணல் கொடுப்பதற்கு உயர் நீதிமன்றத் தீர்ப்பை நடைமுறைப்படுத்த வேண்டும்.

எல்லாவற்றுக்கும் மேலாக, மணல் நமது பயன்பாட்டுக்கும் தேவைக்கும் மட்டுமே அள்ளப்பட வேண்டுமே தவிர, வெளிநாடுகளுக்கும், அண்டை மாநிலமான கேரளத்துக்குக் கடத்தப்படுவதும், ஏற்றுமதி செய்யப்படுவதும் தடுக்கப்பட வேண்டும். நமக்கு நியாயமாகத் தரப்படவேண்டிய தண்ணீரைக்கூடத் தரமறுக்கிறார்கள், சகிக்கிறோம். ஆனால், நமது மணலைக் கொள்ளையடித்துப் போய் தமிழகத்தைப் பாலைவனமாக்குகிறார்களே, இது பொறுப்பதில்லை.

÷முதல்வர் மனதுவைத்தால் மட்டுமே நமது மணல் கொள்ளை போவது தடுக்கப்படும்!

**ஆழ்வார்குறிச்சியில் மண்புழு வளர்த்தல் பயிற்சி**

First Published : 25 Aug 2011 03:11:26 PM IST

அம்பாசமுத்திரம், ஆக. 24:÷ஆழ்வார்குறிச்சி ஸ்ரீ பரமகல்யாணி கல்லூரியில் செவ்வாய்க்கிழமை மண்புழு வளர்த்தல், மண்புழு உரம் தயாரித்தல் குறித்த ஒரு நாள் பயிற்சி முகாம் நடைபெற்றது.

÷இக்கல்லூரியின் விலங்கியல் துறை சார்பில் செவ்வாய்க்கிழமை ஒரு நாள் பயிற்சி முகாம் நடைபெற்றது. முகாமை கல்லூரி முதல்வர் ஏ.ஜெ.ஏ. ரஞ்சித்சிங் தலைமை வகித்து தொடங்கி வைத்தார்.

÷முகாமில் தென்காசி இயற்கை வேளாண், தொழில்நுட்ப மைய இயக்குநர் செந்தில்குமார், திட்ட அலுவலர் மீனாட்சி ஆகியோர் பயிற்சி அளித்தனர்.

÷இதில் விலங்கியல்துறை மூன்றாம் ஆண்டு மாணவர்கள் , விலங்கியல் துறை விரிவுரையாளர் ஜெ.எஸ். மைக்கேல் மற்றும் பேராசிரியர்கள் கலந்து கொண்டனர்.

÷முகாமில் மண்புழு உரம் தயாரித்தல், மண்புழு வளர்த்தல் குறித்த செயல்விளக்கம் அளிக்கப்பட்டது.

**பார்த்தீனியச்செடி ஒழிப்பு விழிப்புணர்வு முகாம்**

First Published : 25 Aug 2011 12:11:15 PM IST

உடுமலை, ஆக. 24: உடுமலை ஒன்றியம் பெரியகோட்டை ஊராட்சியில் பார்த்தீனிய செடிகள் ஒழிப்பு விழிப்புணர்வு முகாம் திங்கள்கிழமை நடைபெற்றது.

÷பெரியகோட்டை ஊராட்சிக்கு உட்பட்ட விநாயகர் கோயில் அருகில் நடந்த முகாமுக்கு ஊராட்சித் தலைவர் ஆர்.முருகேசன் தலைமை வகித்தார்.

வேளாண் உதவி இயக்குனர் (பொறுப்பு) நா.திருமகள் ஜோதி முன்னிலை வகித்தார்.

÷மக்கள் பிரதிநிதிகளுக்கும், மகளிர் குழுவினருக்கும் பார்த்தீனிய ஒழிப்பு குறித்த செயல்முறை பயிற்சி அளிக்கப்பட்டது.

வேளாண் அலுவலர்கள் கா.சுரேஸ்குமார், வைரமுத்து மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

**அரியலூர் மாவட்டத்துக்கு 4900 மெட்ரிக் டன் ரசாயன உரம் ஒதுக்கீடு**

First Published : 25 Aug 2011 01:28:55 PM IST

அரியலூர், ஆக. 24: அரியலூர் மாவட்டத்துக்கு 4900 மெட்ரிக் டன் ரசாயன உரம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றார் மாவட்ட வேளாண் இணை இயக்குநர் செ. சிவகுமார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

அரியலூர் மாவட்டத்துக்கு 1545 மெட்ரிக் டன் யூரியா, 1310 மெட்ரிக் டன் டை அம்மோனியம் பாஸ்பேட், 1595 மெட்ரிக் டன் கூட்டு உரம், 300 மெட்ரிக் டன் சூப்பர் பாஸ்பேட், 150 மெட்ரிக்

டன் அம்மோனியம் சல்பேட் என மொத்தம் 4900 மெட்ரிக் டன் ரசாயன உரம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதில் இதுவரை 800 மெட்ரிக் டன் யூரியாவும், 510 மெட்ரி6க் டன் டை அம்மோனியம் பாஸ்பேட்டும், 1070 மெட்ரிக் டன் கூட்டு உரமும் பெறப்பட்டுள்ளது. மீதமுள்ள உரங்களை இந்த மாத இறுதிக்குள் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்களில் 228 மெட்ரிக் டன் யூரியாவும், 524 மெட்ரிக் டன் டை அம்மோனியம் பாஸ்பேட்டும், 149 மெட்ரிக் டன் முரியேட் ஆப் பொட்டாஸ்ய்ம், 236 மெட்ரிக் டன் கூட்டு உரமும் இருப்பு வைக்கப்பட்டுள்ளன.

இதுபோல, தனியார் விற்பனை நிலையங்களில் 272 மெட்ரிக் டன் யூரியாவும், 162 மெட்ரிக் டன் டை அம்மோனியம் பாஸ்பேட்டும், 318 மெட்ரிக் டன் கூட்டு உரமும், 36 மெட்ரிக் டன் முரியேட் ஆப் பொட்டாஸ்ய்ம், 436 மெட்ரிக் டன் கலப்பு உரங்களும் கையிருப்பில் உள்ளன.

ரசாயன உரங்களின் விற்பனை விலையை 2010, ஆகஸ்ட் 1 ஆம் தேதி முதல் உற்பத்தி செய்த நிறுவனங்களே நிர்ணயம் செய்வதால், அடிக்கடி விலை மாற்றத்துக்குளாகிறது.

எனவே, விவசாயிகள் உரங்களை வாங்கும் போது மூட்டையின் மேல் பொறிக்கப்பட்டுள்ள விலையை சரிபார்த்து, விற்பனையாளர்களிடம் பட்டியலைக் கேட்டு உரத்தை வாங்கிக் கொள்ளலாம்.

நிர்ணயிக்கப்பட்ட விலையைக் காட்டிலும் கூடுதலாக ரசாயன உரங்களை விற்பனை செய்யக் கூடாது. அப்படி விற்பனை செய்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார் அவர்.

## 16 உரக் கடைகள் மீது நடவடிக்கை

First Published : 25 Aug 2011 01:41:21 PM IST

கரூர், ஆக.24: 16 உரக்கடைகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வேளாண்மை இணை இயக்குநர் கி.ஜெகதீசன் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

கரூர் மாவட்டத்தில் குளித்தலை, கிருஷ்ணராயபுரம், தோகைமலை உள்ளிட்ட காவிரி டெல்டா பகுதிகளிலுள்ள உரக்கடைகளில் வேளாண்மை உதவி இயக்குநர்(தரக்கட்டுப்பாடு) பூ. மதனகோபால் தலைமையில் வேளாண்மை அலுவலர்கள் 2 நாள்கள் திடீர் ஆய்வு மேற்கொண்டனர்.

24 கடைகளில் மேற்கொள்ளப்பட்ட இந்த ஆய்வில் 16 கடைகள் உரக்கட்டுப்பாட்டு சட்டத்தை மீறியுள்ளது தெரிய வந்ததைத் தொடர்ந்து, பல்வேறு குற்றங்களின் கீழ் இந்த கடைகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும், நடப்பாண்டு கரூர் மாவட்டத்தில் 203 உர மாதிரிகள் எடுக்கப்பட்டது. இதில், சத்துக்குறைபாடு காரணமாக ஒரு நிறுவனத்தின் மீது உரக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

உர விற்பனையாளர்கள் உர மூட்டையின் மீது உள்ள விற்பனை விலையிலேயே உரத்தை விற்பனை செய்ய வேண்டும். எக்காரணம் கொண்டும் அதிகமான விலைக்கு விற்கக் கூடாது.

உர விநியோகத்தின் போது விவசாயிகளுக்கு உரிய ரசீது வழங்க வேண்டும்.

தனியார் மற்றும் கூட்டுறவு உர விற்பனை நிலையங்களில் உர இருப்பு மற்றும் விலைப்பட்டியலை உர தயாரிப்பு நிறுவன வாரியாக விவசாயிகளுக்கு தெரியும்படி எழுதி வைக்க வேண்டும்.

விளம்பரப்பலகை தெளிவாக இல்லாத அல்லது விளம்பரப்பலகை வைக்கப்படாத கடைகளிலுள்ள உரங்கள் கள்ளச்சந்தையில் விற்பனை செய்ய பதுக்கி வைக்கப்பட்டதாக கருதி உரங்கள் பறிமுதல் செய்யப்படுவதுடன் சட்ட மேல் நடவடிக்கையும் எடுக்கப்படும்.

உர விற்பனை குறைபாடு குறித்து விவசாயிகள் புகார் தெரிவித்தால் உர விற்பனையாளர்கள் மீது உரக்கட்டுப்பாட்டு சட்டத்தின் கீழ் உர உரிமம் நிரந்தரமாக ரத்து செய்வதோடு, கடுமையான சட்ட மேல்நடவடிக்கையும் எடுக்கப்படும்.

உரம் தொடர்பாக புகார் கொடுக்க விரும்பும் விவசாயிகள்

கரூர்- 04324-220299, தாந்தோன்றிமலை-04324-255225, 255020, க. பரமத்தி- 04320-283299, அரவக்குறிச்சி- 04320231299, குளித்தலை 04323-222101, தோகைமலை- 04323-252808, கடவூர்- 04323-251252, கிருஷ்ணராயபுரம்- 04323-243342 ஆகிய எண்களில் அந்தந்த வட்டார வேளாண்மை உதவி இயக்குநர்களை தொடர்பு கொண்டு புகார் தெரிவிக்கலாம்.

விவசாயிகள் தங்கள் பயிர் சாகுபடிக்கு டி.ஏ.பி. உரத்தினை மட்டும் பயன்படுத்தாமல் மாற்று உரங்களான 20:20:0:13 மற்றும் 16:20:0 போன்ற காம்ப்ளக்ஸ் உரங்களையும் பொட்டாஷ்சத்து கலந்துள்ள 14:35:14 மற்றும் 10:26:26 காம்ப்ளக்ஸ் போன்ற உரங்களை பயன்படுத்தலாம்.

**பவானிசாகர் அணை நீர்மட்டம் 84.06 அடி**

First Published : 25 Aug 2011 11:37:46 AM IST

ஈரோடு, ஆக. 24: பவானிசாகர் அணையின் நீர் மட்டம் புதன்கிழமை 84.06 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 1,861 கன அடி தண்ணீர் வந்தது. ஆற்றில் விநாடிக்கு 300 கன அடி, வாய்க்காலில் விநாடிக்கு 2,200 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. அணையின் நீர் இருப்பு 17.93 டிஎம்சி.

தினமலர்

**பன்னாட்டுசந்தைகளில் தேவை அதிகரிப்பால் நாட்டின் காபி ஏற்றுமதி 3.26 லட்சம் டன்னாக உயர்வு**

ஆகஸ்ட் 26,2011,02:18



பெங்களூரு:நடப்பு காபி பருவம்(அக்டோபர் - செப்டம்பர்) முடிய இன்னும் ஒரு மாதமே உள்ள நிலையில், இதுவரையிலுமாக காபி ஏற்றுமதி, 3.26லட்சம் டன்னாக உயர்ந்துள்ளது. இது, கடந்த காபி பருவத்தின் இதே காலத்தில் 2.38 லட்சம் டன்னாக இருந்தது.இதன்படி, காபி உற்பத்தியை விட, ஏற்றுமதி அதிகரித்துள்ளது. கையிருப்பு காரணமாக இது சாத்தியமாகி யுள் ளது. கடந்தாண்டு காபி பருவத்தில், காபி உற்பத்தி 3 லட்சத்து 25 ஆயிரம் டன்னாக இருந்தது. இதில் அரபிகா வகை காபி 90 ஆயிரம் டன்னாகவும், ரோபஸ்டா வகை காபி 2 லட்சத்து 35 ஆயிரம் டன் என்ற அளவிலும் இருந்தது.

நடப்பு காபி பருவத்தில்,தமிழகம், கேரளா, கர்நாடகா ஆகிய மாநிலங்களில் காபி உற்பத்தி குறிப்பிடத்தக்க அளவிற்கு அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.இது குறித்து, தேசிய காபி வாரியத்தின் மதிப்பீட்டின்படி, நடப்பு காபி பருவத்தில், கர்நாடகாவின் காபி உற்பத்தி, கடந்தாண்டு இதே காலத்தை விட 15 ஆயிரம் டன் அதிகரித்து, 2.13 லட்சம் டன்னில் இருந்து 2.28 லட்சம் டன்னாக உயரும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே காலத்தில், கேரளாவின் காபி உற்பத்தி 66 ஆயிரம் டன் என்ற அளவில் இருந்து, 69 ஆயிரம் டன்னாகவும், தமிழகத்தின் காபி உற்பத்தி, 16 ஆயிரத்து 600 டன்னில் இருந்து, 18 ஆயிரத்து 500 டன்னாக உயரும் என மதிப்பிடப் பட்டுள்ளது.இதர மாநிலங்களையும் சேர்த்து, நடப்பு காபி பருவத்தில், காபி உற்பத்தி 3 லட்சத்து 2 ஆயிரம் டன்னாக இருக்கும் என்று தேசிய காபி வாரியம் மதிப்பிட்டுள்ளது. இதில் ரோபஸ்டா வகை காபி உற்பத்தி 2 லட்சத்து 7 ஆயிரம் டன்னாகவும், அரபிகா வகை காபி உற்பத்தி 94 ஆயிரத்து 140 டன்னாகவும் இருக்கும் என்று

தெரிவிக்கப்பட்டுள்ளது. நாட்டின் காபி கையிருப்பு 20 ஆயிரம் டன் என்ற அளவில் உள்ளது.

இதையடுத்து, சென்ற ஆண்டு அக்டோபர் மாதம் தொடங்கி, இதுவரையிலு மாக, நாட்டின் காபி ஏற்றுமதி, 3 லட்சத்து 26 ஆயிரத்து 425 டன்னாக உயர்ந்துள்ளது. இது, கடந்தாண்டு இதே காலத்தில் 2.38 லட்சம் டன்னாக இருந்தது.காபி ஏற்றுமதி, ரூபாய் மதிப்பில் 4,369 கோடியாக (2,437 கோடி ரூபாய்) உயர்ந்துள்ளது. இது, டாலர் மதிப்பில் 95.60 கோடி டாலர் ( 51 கோடி டாலர்) என்ற அளவிற்கு அதிகரித்துள்ளது. இதே காலத்தில், ஒரு டன் காபி விலை,சராசரியாக ஒரு லட்சத்து 2 ஆயிரத்து 532 ரூபாயில் இருந்து ஒரு லட்சத்து 33 ஆயிரத்து 858 ரூபாயாக உயர்ந்துள்ளது.


நடப்பு 2011ம் ஆண்டு ஜனவரி முதல் மே வரையிலான ஐந்து மாத காலத் தில், காபி ஏற்றுமதி, கடந்தாண்டின் இதே காலத்தை விட 43சதவீதம் அதிகரித்து, 1 லட்சத்து27 ஆயிரத்து 160 டன்னில் இருந்து, 1 லட்சத்து 81 ஆயிரத்து 308 டன்னாக உயர்ந்துள்ளது.ஜூன் மாதத்தில், 40 ஆயிரத்து 202 டன் காபி ஏற்றுமதி செய்யப்பட்டது. ஜூலை மாதத்தில் காபி ஏற்றுமதி 28 ஆயிரத்து 116 டன் என்ற அளவில் இருந்தது.எனினும், இது, சென்ற ஆண்டு இதே மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட ஏற்றுமதியை விட 29சதவீதம் (27 ஆயிரத்து 767 டன்) அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது.

நடப்பு காலண்டர் ஆண்டில், ஜனவரி முதல் நடப்பு ஆகஸ்ட் மாதம் வரையிலுமாக 2லட்சத்து 30 ஆயிரம் டன் காபி ஏற்றுமதி செய்யப் பட்டுள்ளது. டிசம்பர் இறுதிக்குள் மேலும் 30 ஆயிரம் டன் ஏற்றுமதி செய்யப்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது. நடப்பாண்டில், உள்நாட்டில் காபி பயன்பாடு 80 ஆயிரம் டன் என்ற அளவில் இருக்கும் என்று தெரிகிறது. தேசிய காபி வாரியம், வரும் 2011-12ம் காபி பருவத்தில் (அக்டோபர்-செப்டம்பர்), நாட்டின் காபி உற்பத்தி 3 லட்சத்து 22 ஆயிரம் டன்னாக இருக்கும் என மதிப்பிட்டுள்ளது.

இதில் அரபிகா வகை காபி 1.04 லட்சம் டன்னாகவும், ரோபஸ்டா வகை காபி உற்பத்தி 2 லட்சத்து 17 ஆயிரம் டன் என்ற அளவிலும் இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.வரும் காபி ஆண்டில், உற்பத்தி நன்கு இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளதால், காபி ஏற்றுமதி மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளதாக ஏற்றுமதியாளர்கள் தெரிவித்தனர்.நம் நாட்டில் இருந்து இத்தாலி, ஸ்பெயின் மற்றும் ரஷ்ய கூட்டமைப்பு நாடுகளுக்கு அதிகளவில் காபி ஏற்றுமதியாகிறது.

**உணவுப் பொருள் பணவீக்கம் 9.80 சதவீதமாக உயர்ந்தது**

ஆகஸ்ட் 26,2011,02:16




புதுடில்லி:நாட்டின் உணவுப் பொருள் பணவீக்கம், ஆகஸ்ட் 13ம் தேதியுடன் முடிவடைந்த வாரத்தில், 9.80 சதவீதமாக உயர்ந்துள்ளது. இது, இதற்கு முந்தைய வாரத்தில், 9.03 சதவீதமாகக் குறைந்து காணப்பட்டது. ஆக, உணவுப் பொருள் பணவீக்கம், 0.77 சதவீதம் அதிகரித்து, இரட்டை இலக்கத்தை நெருங்கி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

கணக்கீடு செய்வதற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வாரத்தில், ஆண்டுக் கணக்கின் அடிப்படையில், வெங்காயத்தின் விலை, 44.42 சதவீதம் அதிகரித்துள்ளது. இதையடுத்து, உருளைக்கிழங்கின் விலை, 16.39 சதவீதமும், பழங்கள் விலை 27.01 சதவீதமும் உயர்ந்திருந்தன.மேலும், முட்டை, மீன், இறைச்சி ஆகியவற்றின் விலையும், 13.37 சதவீதம் அதிகரித் துக் காணப்பட்டது.இவை தவிர, பால் விலை 9.51 சதவீதமும், காய்கறிகள் மற்றும் உணவு தானியங்களின் விலை முறையே, 6.52 சதவீதம் மற்றும் 5.22 சதவீதமும் உயர்ந்திருந்தது.

இருப்பினும்,பருப்பு வகைகளின் விலை 5.56 சதவீதமும்,கோதுமையின் விலை, 2.80 சதவீதமும் குறைந்திருந்தது. மதிப் பீட்டு வாரத்தில், முக்கிய உணவுப் பொருட்களின் பணவீக்கம் 12.40 சதவீதமாக அதிகரித்துள்ளது. இது, இதற்கு முந்தைய வாரத்தில், 11.64 சதவீதம் என்ற அளவில், சற்று குறைந்து காணப்பட்டது. மொத்த விலை குறியீட்டு எண்ணை கணக்கிடுவதில், முக்கிய பொருட்களின் பங்களிப்பு, 20 சதவீதத்திற்கும் மேல் உள்ளது.

உணவுப் பொருட்கள் அல்லாத பிரிவில், நூலிழை, எண்ணெய் வித்துக்கள் மற்றும் தாதுப் பொருட்களின் விலை, 17.80 சதவீதம் அதிகரித்துள்ளது. இது, இதற்கு முந்தைய வாரத்தில், 16.07 சதவீதமாக சரிவடைந்திருந்தது. அதேசமயம், மின் சாரம் மற்றும் எரிபொருட்களுக்கான பணவீக்கம், எந்த வித மாற்றமுமின்றி, 13.13 சதவீதம் என்ற அளவிலேயே உள்ளது. கடந்த 2010ம் ஆண்டு, நாட்டின் உணவுப் பொருள் பணவீக்கம் இரட்டை இலக்க அளவிலேயே காணப்பட்டது.

இருப்பினும், நடப்பு 2011ம் ஆண்டு, மார்ச் மாதம் முதல் குறையத் தொடங்கியது. ஜூலை மாதமத்தியில், உணவுப் பணவீக்கம் 7.33 சதவீதமாக சரிவடைந்திருந்தது. அதேசமயம், ஜூலை மாத இறுதியில், கடந்த நான்கரை மாதங்களில் இல்லாத அளவிற்கு, 9.90 சதவீதமாக அதிகரித்துக் காணப்பட்டது. இது குறித்து, மத்திய நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி கூறுகையில்,'உணவுப் பணவீக்கம் 9.80 சதவீதமாக அதிகரித்துள்ளது என்பது, வருத்தம் அளிப்பதாக உள்ளது. இருப்பினும், வாராந்திர அடிப்படையில், உணவுப் பணவீக்கம்உயர்ந்துள்ளது என்றாலும், நீண்ட கால அடிப்படையில், இது எப்படி உள்ளது என்பதைக் கவனிக்க வேண்டும்' என்று தெரிவித்தார்.

**நறுமணப் பொருள்கள் ஏற்றுமதி 22 சதவீதம் வளர்ச்சி**

ஆகஸ்ட் 26,2011,02:09



கொச்சி:நாட்டின் நறுமணப் பொருள்கள் ஏற்றுமதி, ஏப்ரல் முதல் ஜூலை வரையிலான நான்கு மாத காலத்தில், மதிப்பின் அடிப்படையில், 22 சதவீதம் அதிகரித்து, 2,614 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது. இது, கடந்தாண்டின் இதே காலத்தில், 2,135 கோடி ரூபாயாக இருந்தது.

அதேசமயம், இதே காலத்தில், அளவின் அடிப்படையில், நறுமணப் பொருள்கள் ஏற்றுமதி, 24 சதவீதம் சரிவடைந்து,2 லட்சத்து 8 ஆயிரத்து 775 டன்னிலிருந்து, 1 லட்சத்து 57 ஆயிரத்து 725 டன்னாக குறைந்துள்ளது. கணக்கீடு செய்வதற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட காலத்தில், மிளகு, இஞ்சி, மிளகாய் வற்றல், பெரிய ஏலக்காய், ஜாதிக்காய், புதினா பொருள்கள் நறுமண எண்ணெய், ஓலியோ ரெசின் ஆகியவற்றின் விலை அதிகரித்ததையடுத்து, இவற்றின் வாயிலான ஏற்றுமதி வருவாய், உயர்ந்துள்ளதாக நறுமணப் பொருள்கள் வாரியம் தெரிவித்துள்ளது.

மொத்த ஏற்றுமதியில், மிளகு மற்றும் இஞ்சியின் விலை, முறையே 56மற்றும் 70 சதவீதம்அதிகரித்திருந்தது.ஜாதிக்காய் மற்றும் புதினா பொருள்களின் விலை முறையே, 65 மற்றும் 73 சதவீதம் உயர்ந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

அரசு தோட்டக்கலை பண்ணைகளில் தயார் : பூச்செடிகள் மற்றும் மரக்கன்றுகள் விற்பனைக்கு

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 26,2011,01:36 IST

காஞ்சிபுரம் : காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள, அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில், 2 லட்சத்து 56 ஆயிரம் மல்லி செடிகள் மற்றும் மரக்கன்றுகள் விற்பனைக்கு தயார் நிலையில் உள்ளன. காஞ்சிபுரம் மாவட்டத்தில், காஞ்சிபுரம் அடுத்த விச்சந்தாங்கல், மேல்கதிர்பூர், மேல்ஒட்டிவாக்கம், செங்கல்பட்டு அடுத்த ஆத்தூர், தக்கோலம் அடுத்த பிச்சிவாக்கம் ஆகிய கிராமங்களில், அரசு தோட்டக்கலைப் பண்ணை உள்ளது. இப்பண்ணைகளை தோட்டக்கலைத் துறை அலுவலர்கள் பராமரித்து வருகின்றனர். இங்கு ஆண்டுதோறும், மா, கொய்யா, தேக்கு, வேம்பு, புங்கை போன்ற மரக்கன்றுகள், மல்லி, கருவேப்பிலை போன்ற செடிகள், அழகு செடிகள், ஆகியவை உற்பத்தி செய்யப்பட்டு, விற்பனை செய்யப்படுகிறது.

தற்போது விச்சந்தாங்கல் அரசு பண்ணையில், 500 கொய்யா செடிகள், 60 ஆயிரம் மல்லி செடிகள், 20 ஆயிரம் தேக்கு மரக்கன்றுகள், 4 ஆயிரம் குமிழ் தேக்குகள், அசோகா, வேம்பு, புங்கை போன்ற மரக்கன்றுகள் 5 ஆயிரம் உள்ளன. மேல்கதிர்பூர் பண்ணையில், 57 ஆயிரம் மல்லி செடிகள், 91 ஆயிரம் கறிவேப்பிலை செடிகள் உள்ளன. மேல்ஒட்டிவாக்கம் பண்ணையில், 94 ஆயிரம் கறிவேப்பிலை செடிகள், 91 ஆயிரம் மல்லி செடிகள், பிச்சிவாக்கம் பண்ணையில், 56 ஆயிரம் கறிவேப்பிலை செடிகள், 8 ஆயிரம் மல்லி செடிகள் உள்ளன. ஆத்தூர் பண்ணையில், 39 ஆயிரம் மல்லி செடிகள், 72 ஆயிரம் கறிவேப்பிலை செடிகள், 10 ஆயிரம் அழகு செடிகள், 15 ஆயிரம் மரக்கன்றுகள் உள்ளன. அனைத்து செடிகளும், விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ளன.

இது குறித்து தோட்டக்கலைப் பண்ணை உதவி இயக்குனர் ஸ்ரீவஸ்தவா கூறியதாவது: அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில், விவசாயிகள் மற்றும் பொதுமக்களுக்கு தேவையான, பூச்செடிகள், மரக்கன்றுகள் ஆகியவற்றை உற்பத்தி செய்து விற்பனை செய்து வருகிறோம். விவசாயிகளும், ஆர்வமுடன் வாங்கிச் செல்கின்றனர். விச்சந்தாங்கல் பண்ணையில், கடந்த ஆண்டு 3 லட்சம் செடிகள் உற்பத்தி செய்யப்பட்டு, 15 லட்சம் ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டன. இந்த ஆண்டு 3 லட்சம் செடிகள் உற்பத்தி செய்து, 25 லட்சம் ரூபாய்க்கு விற்பனை செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆத்தூர் பண்ணையில், கடந்த ஆண்டு 3 லட்சத்து 50 ஆயிரம் செடிகள் உற்பத்தி செய்யப்பட்டு, 20 லட்சம் ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது. இந்த ஆண்டு, 3 லட்சத்து 68 ஆயிரம் செடிகள் உற்பத்தி செய்து, 36 லட்சம் ரூபாய்க்கு விற்பனை செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது. மேல் ஒட்டிவாக்கம், கீழ்கதிர்பூர் பண்ணையில், கடந்த ஆண்டு 2 லட்சத்து 10 ஆயிரம் செடிகள் உற்பத்தி செய்யப்பட்டு, 5 லட்சம் ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது. இந்த ஆண்டு மேல்கதிர்பூர் பண்ணையில், 46 ஆயிரத்து

500 செடிகள் உற்பத்தி செய்து, 9 லட்சம் ரூபாய்க்கு விற்கவும், மேல்ஒட்டிவாக்கம் பண்ணையில், ஒரு லட்சத்து 16 ஆயிரம் செடிகள் விற்பனை செய்து, 39 லட்சம் ரூபாய்க்கு விற்கவும், இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பிச்சிவாக்கம் பண்ணையில், கடந்த ஆண்டு 2 லட்சம் செடிகள் உற்பத்தி செய்யப்பட்டு, 10 லட்சம் ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது. நடப்பாண்டில் 3 லட்சம் செடிகள் உற்பத்தி செய்து, 15 லட்சம் ரூபாய்க்கு விற்பனை செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு ஸ்ரீவஸ்தவா தெரிவித்தார்.

ஒரு செடி 5 ரூபாய் : காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள அரசு தோட்டக்கலைப் பண்ணைகள் அனைத்திலும், கொய்யா செடி ஒன்று 12 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. மல்லி, கறிவேப்பிலை செடிகள், தேக்கு, குமிழ்தேக்கு, வேம்பு, புங்கை, அசோகா மரக்கன்றுகள் ஆகியவை, ஒன்று 5 ரூபாய் என விற்பனை செய்யப்படுகிறது. வீடுகளில் அழகுக்கு வளர்க்கப்படும், பூச்செடிகள், குரோட்டன் வகைகள், பாலீதீன் கவரிலிருந்தால் 5 ரூபாய் என்றும், மண் தொட்டியிலிருந்தால் 12 ரூபாய் என்றும் விற்பனை செய்யப்படுகிறது.

**விவசாயிகளுக்கு வருமானம் தரும் கம்பு நேப்பியர் ஒட்டுப்புல்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 26,2011,01:41 IST

திருவள்ளூர் : கால்நடைகளுக்கு சத்தான தீவனமாகவும், விவசாயிகளுக்கு வருமானம் தரும் உபதொழிலாகவும் விளங்குகிறது, கம்பு நேப்பியர் ஒட்டுப்புல். கால்நடைகளுக்கு இடப்படும் தீவனங்களில், புல்வகைகள் விலை குறைந்த, எளிதில் கிடைக்கக் கூடிய தீவனமாகும்.

நம் நாட்டில் பயிர் செய்யப்படும் புல்வகைகளில், கம்பு நேப்பியர் ஒட்டுப்புல் குறிப்பிடத்தக்கது. இதுகுறித்து, திரூர் வேளாண்மை அறிவியல் நிலையத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் தேவநாதன், உதவிப் பேராசிரியர் நிர்மலா தேவி ஆகியோர் கூறியதாவது: "தீவனப் புல்வகைகளில் குறைந்த இடத்தில், குறைந்த காலத்தில் அதிக மகசூல் தரக்கூடிய தன்மை, கம்பு நேப்பியர் புல்லுக்கு உண்டு. இது கம்பு மற்றும் நேப்பியர் ஆகிய இரண்டு புல் இனங்களை ஒட்டு சேர்த்து உருவாக்கப்பட்டது. சிறப்பியல்புகள்: அதிக தூர்கள் மற்றும் சாயத் தன்மை கொண்டது. மிக மிருதுவான இனிப்பான சாறு நிறைந்த தண்டுகள், அதிக இலை தண்டுகள் விகிதம், பூச்சி மற்றும் நோய் தாக்குதல் அற்றது. ஆண்டுக்கு ஏழு மறுதாம்பு பயிர் அறுவடை செய்யலாம். நீர்ப்பாசன வசதி இருந்தால், இதை ஆண்டு முழுவதும் நடவு செய்யலாம்.

நன்கு உழுது தயார் செய்த நிலத்தில், 50 செ.மீ., இடைவெளியில் பார்கள் அமைத்து, பார்களின் சரிவில், 50 செ.மீ., இடைவெளியில் ஒரு கரணை என்ற விதத்தில் நடவு செய்ய வேண்டும். ஒரு எக்டேர் நடவு செய்ய, 40 ஆயிரம் விதைக் கரணைகள் தேவைப்படும். நடவு வயலில், கரணைகளை நடவு செய்யும் முன், ஒரு எக்டேருக்கு, 110 கிலோ யூரியா, 310 கிலோ சூப்பர் மற்றும் 68 கிலோ பொட்டாஷ் ஆகியவற்றை அடியுரமாக இடவேண்டும். முதல் அறுவடை நடவு செய்த 75-80 நாட்களிலும், அதையடுத்து மற்ற அறுவடைகள், 45 நாட்கள் இடைவெளியிலும் மேற்கொள்ளலாம். நன்கு பராமரிக்கப்பட்ட பயிரில் சராசரியாக ஒரு எக்டேருக்கு ஓராண்டில் 300 முதல் 350 டன் தரமான, சுவையான பசுந்தீவனம் மகசூலாக பெறலாம். இறவைப் பயிராக ஆண்டு முழுவதும் பயிரிடலாம். எல்லா வகை மண்களுக்கும் ஏற்றது. நீர்ப்பாசனம்: நட்டவுடன் மூன்று நாட்களுக்குப் பிறகும், பின்பு மண் மற்றும் மழை அளவைப் பொறுத்து 8 முதல் 10 நாட்களுக்கு ஒருமுறையும் செய்ய வேண்டும். முதல் அறுவடை, 75 முதல் 80 நாட்களிலும், மறு அறுவடைகள், 45 நாட்கள் இடைவெளியிலும் செய்ய வேண்டும். பசுந்தீவன மகசூல் ஒரு எக்டேருக்கு, ஓராண்டிற்கு, 350-400 டன்கள் கிடைக்கும்'. இவ்வாறு அவர்கள் கூறினர்.

**வேளாண் அறிவியல் கல்லூரி மாணவியருக்கு பயற்சி முகாம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 26,2011,02:29 IST

நாமக்கல்: நாமக்கல், வரகூர் கிராமத்தில், தமிழ்நாடு வேளாண் பல்கலை, திருச்சி அன்பில் தர்மலிங்கம் வேளாண் கல்லூரி ஆராய்ச்சி நிலைய மாணவியருக்கு, ஒருமாத கிராம தங்கள் பயிற்சி முகாம் நடந்தது.பயிற்சி முகாமில், எருமப்பட்டி வேளாண் உதவி இயக்குனர் தங்கராஜூ, தோட்டக்கலைத் துறை உதவி இயக்குனர் அசோகன் ஆகியோர் பங்கேற்று, பயிர்களை தாக்கும் மாவுப்பூச்சி கட்டுப்படுத்தும் முறை, பார்த்தீனியம் களைச் செடியின் ஒழிப்பு அவசியம் உள்ளிட்டவை குறித்து விளக்கிப் பேசினர். மாணவ, மாணவியரின் சந்தேகங்களுக்கு விளக்கம் அளிக்கப்பட்டது. மேலும், "முகாமில் மேம்படுத்தப்பட்ட நேரடி நெல் பயிரிடும் கருவி மூலம் களை எடுக்கும் கருவிகள் ஆகியவை காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது. அதுபோல், ஒருங்கிணைந்த பண்ணைத் திட்டத்தின் திருந்திய நெல் சாகுபடி முறையும் அமைக்கப்பட்டுள்ளது. இவற்றைக் கண்டு விசாயிகள் பயன்பெறலாம்' என, வேளாண் அதிகாரிகள் தெரிவித்தனர். வேளாண் உதவி அலுவலர் தவமணி, சுப்ரமணியன் உட்பட வேளாண் அறிவியல் கல்லூரி மாணவியர் பலர் பங்கேற்றனர்.

**நீலகிரி தேயிலைக்கு பாகிஸ்தானில் கிராக்கி :வருமான உயர்வால் வர்த்தகர்கள் மகிழ்ச்சி**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 26,2011,00:09 IST

குன்னூர் : பாகிஸ்தான் வர்த்தகர்கள் அதிகளவு இறக்குமதி செய்ததால், நீலகிரி தேயிலை வர்த்தகத்தில் கடந்தாண்டை காட்டிலும் இந்தாண்டின் முதல் ஏழு மாதத்தில் 13.52 கோடி ரூபாய் கூடுதல் வருமானம் கிடைத்துள்ளது. நீலகிரியில் உற்பத்தி செய்யப்பட்டு, குன்னூர் ஏல மையத்தில் விற்கப்படும் தேயிலைத் தூள் ஆந்திரா, கர்நாடகா, குஜராத், பஞ்சாப், மகாராஷ்டிரா உட்பட வெளி மாநிலங்களுக்கு உள்நாட்டு வர்த்தகத்துக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. ஏலத்தில் விற்கப்படும் தேயிலைத் தூளில் 60 சதவீதம் பாகிஸ்தான், ரஷ்யா, துனிசியா, எகிப்து, ஈரான், ஈராக் உட்பட ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதி வர்த்தகத்துக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. இந்தாண்டு பாகிஸ்தான் அதிகளவு நீலகிரி தேயிலைத் தூளை இறக்குமதி செய்ததால், நீலகிரி தேயிலை வர்த்தகத்தில் வருமான உயர்வு ஏற்பட்டுள்ளது.

குன்னூர் வேளாண்மை மேலாண்மை மையத்தில், "தேயிலை சந்தை நிலவரம்' என்ற தலைப்பில் கருத்தரங்கு நடந்தது. மைய இயக் குனர் ஐயங்கார் தலைமை வகித்தார். சர்வதேச நிர்வாகவியல் ஆலோசகர் சுந்தர் பேசியதாவது: குன்னூர் தேயிலை ஏல மையத்தில் இந்தாண்டு ஜனவரி - ஜூலை மாதத்தில் மொத்தம் 2.98 லட்சம் கிலோ தேயிலைத் தூள் விற்கப்பட்டது. ஒரு கிலோ சராசரி விலை 64.11 ரூபாயாக இருந்தது. கடந்தாண்டு (2010) இதே காலகட்டத்தில், 2.93 லட்சம் கிலோ தேயிலைத் தூள் விற்கப்பட்டது; சராசரி விலை கிலோவுக்கு 60.59 ரூபாயாக இருந்தது. இந்தாண்டின் முதல் ஐந்து மாதங்களில் ஏற்றுமதி வர்த்தகம் மந்தமாக இருந்தபோதும், அடுத்த இரு மாதங்களில் களை கட்டியது.

பாகிஸ்தான் வர்த்தகர்கள் அதிகளவு தேயிலைத்தூள் இறக்குமதி செய்தனர். ரஷ்யா, ஐரோப்பிய நாடுகளின் வர்த்தகர்களும் கணிசமான அளவு வாங்கினர். ஏற்றுமதி வர்த்தகம் கை கொடுத்ததால், இந்தாண்டின் முதல் ஏழு மாதத்தில் தேயிலை வர்த்தகத்தால் 191.05 கோடி ரூபாய் வருமானம் கிடைத்துள்ளது. கடந்தாண்டு இதே காலகட்டத்தில் 177.53 கோடி ரூபாய் வருமானம் கிடைத்தது. கடந்தாண்டை விட இந்தாண்டின் முதல் ஏழு மாதத்தில் 13.52 கோடி ரூபாய் வருமானம் ஈட்டப்பட்டுள்ளது. இவ்வாறு, சுந்தர் பேசினார்.

**வெள்ளரிக்காய் விலை சரிவுகுமரி விவசாயிகள் விரக்தி**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 26,2011,02:18 IST

வில்லுக்குறி:வெள்ளரிக்காய்க்கு ஏற்ற விலை இல்லாத நிலையிலும் விவசாயிகள் மார்க்கெட்டுக்கு கொண்டு செல்கின்றனர்.குமரி மாவட்டத்தை பொறுத்தவரை நெல், வாழை, ரப்பர் மற்றும் தோட்ட பயிர்கள் விவசாயம் செய்யும் விவசாயிகள் அதிகம் உள்ளனர். தோட்ட பயிர்களில் வெள்ளரிக்காய் அதிகம் பயிரிடப்படுவதாக விவசாயிகள் கூறுகின்றனர். வெள்ளரிக்காய் மனிதனுக்கு வெயில் காலங்களில் உடலுக்கு குளிர்ச்சியை தரக்கூடியது.வெள்ளரி பிஞ்சு தின்பதற்கு சுவையாக இருக்கும். அதே போல் சமையலில் வெள்ளரிக்காய்க்கு தனி இடம் உண்டு. மருத்துவ பயன்பாட்டிற்கு குறிப்பாக ஆயுர்வேத மருத்துவத்தில் அதிகம் பயன்படுத்தப்படுகிறது. குமரி மாவட்டத்தை பொறுத்தவரை வெள்ளரிக்காய் விவசாயம் பரவலாக நடக்கிறது. ஆனால் வெள்ளரிக்காய் விலை வீழ்ச்சி விவசாயிகளை வேதனைக்கு உள்ளாக்கியுள்ளது.இது குறித்து வெள்ளரிக்காய் விவசாயி பொன்னுபிள்ளை கூறியதாவது:நான் மாம்பழத்துறையாறு அணை பகுதியில் வெள்ளரிக்காய் பயிர் செய்துள்ளேன். வெள்ளரிக்காய் 90 நாட்கள் பயிராகும். 40 நாட்களில் இருந்து காய்கள் பறிக்க துவங்கலாம். வாரம் இருமுறை பறிக்கலாம்.

இதை மார்த்தாண்டம் மார்க்கெட்டுக்கு கொண்டு சென்று விற்பனை செய்து வருகிறேன்.வேலை கூலி, உரம், பூச்சி மருந்து போன்ற செலவுகள் உள்ளது. ஒரு மூடை குறைந்தது 700 ரூபாய்க்கு விற்க வேண்டும். ஆனால் தற்போது 100 முதல் 200 ரூபாய்க்கு விற்பனை ஆகிறது. இதை உடனுக்குடன் விற்பனை செய்ய வேண்டும். இல்லை எனில் பழுத்து யாருக்கும் பயன் இல்லாத நிலை உருவாகும். இவ்வாறு வெள்ளரிக்காய் விவசாயி பொன்னுபிள்ளை கூறினார்.

**விவசாயிகளுக்கு 14 வகையான வேளாண் இடுபொருள் வழங்கல்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 26,2011,01:16 IST

திருத்துறைப்பூண்டி: தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் கலர் உவர் நில சீர்திருத்தத்துக்கான நில சீர்த்திகளான ஜிப்சம் மற்றும் தக்கை பூண்டு உட்பட 14 வகையான வேளாண் இடு பொருட்கள் 2.64 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் விவசாயிகளுக்கு தலைமை செயலக தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்ட ஆலோசகர் உமாசங்கர் வழங்கினார். தமிழ்நாடு வேளாண் பல்கலை, பட்டுக்கோட்டை வேளாண் ஆராய்ச்சி நிலையம் சார்பில் தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் கலர் உவர் நில சீர்த்திருத்தமும், நெல் மகசூல் அதிகரிக்கும் திட்டம் திருவாரூர் திருத்துறைப்பூண்டி, முத்துப்பேட்டை, வேதாரண்யம், தாலுகாவில் 81 ஏக்கர்

பரப்பளவில் செயல் விளக்க திடல் நடந்து வருகிறது. இதில், 50 சதவீத மானியத்தில் விவசாயிகளுக்கு வேளாண் இடு பொருட்கள் வழங்கப்பட்டது. இத்திட்ட செயல்பாடு மற்றும் கள ஆய்வு பணியை தேசிய வேளாண் அபிவிருத்தி திட்ட ஆலோசகர் உமாசங்கர் கொற்கை மற்றும் சேகல் கிராமங்களில் கள ஆய்வு செய்து விவசாயிகளிடம் கலந்துரையாடினார்.வேளாண் துணை இயக்குனர் இளஞ்செழியன் இத்திட்டத்தினை விவசாயிகள் முறையாக பயன்படுத்தி தங்கள் கலர் நிலங்களை நல்ல நிலங்களாக மாற்றியும், பண்ணை கருவிகளை பயன்படுத்தி நெல் சாகுபடி செய்து வேலையாட்கள் செலவுகளை குறைத்து அதிக மகசூல் பெறுமாறு விவசாயிகளுக்கு அறிவுறுத்தினார். இத்திட்டத்தின் இணை திட் ட அலுவலர் பட்டுக்கோட் டை வேளாண் ஆராய்ச்சி நிலையம் மாரிமுத்து, இத்திட்ட செயல்பாடான கலர் நிலங்களை ஜிப்சம் அல்லது கரும்பு ஆலை கழிவை கொண்டு சீர்த்திருத்துவது, தக்கை பூண்டி வளர்த்து மடக்கி உளவு செய்தல், நெல் மகசூல் அதிகரிக்கும் வழி முறைகள் குறித்து எடுத்து கூறினார். கள ஆய்வில் திருத்துறைப்பூண்டி வட்டார வேளாண்மை அலுவலர் தெய்வேந்திரன், உதவி வேளாண்மை அலுவலர்கள் மகேஷ், ரமேஷ்குமார் ஆகியோர் ஏற்பாடுகளை செய்திருந்தனர். இதில், 50க்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்று திட்டத்தின் கீழ் அறுவடை இயந்திரம் பவர் வீடர் மற்றும் பண்ணையை சுற்றி வேலிகள் அமைக்க நிதியுதவி வழங்க வேண்டும் என்று திட்ட ஆலோசகரிடம் கோரிக்கை வைத்தனர்.

**வரத்து குறைவு: வெங்காய விலை உயர்வு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 26,2011,01:58 IST

சிவகங்கை : தமிழகத்திற்கு வெங்காய வரத்து குறைவால், கிலோ 27 ரூபாய்க்கு விற்கிறது. அடுத்த மாதம் வரத்து அதிகரித்து 20 ரூபாய் வரை குறையும் என விவசாயத்துறையினர் தெரிவிக்கின்றனர். கடந்த ஆண்டு 0.35 லட்சம் எக்டேரில், சின்ன வெங்காயம் பயிரிடப்பட்டன. 3.40 லட்சம் டன் உற்பத்தியானது. கர்நாடக மாநில வெங்காய வரத்தை பொறுத்து தான் தமிழக சந்தைகளில் வெங்காய விலை நிர்ணயிக்கப்படுகிறது. தற்போது, கர்நாடகாவிலிருந்து தமிழகத்திற்கு வெங்காய வரத்து குறைந்துள்ளது. இருப்பில் உள்ள வெங்காயம் மட்டுமே விற்பனைக்கு வந்து கொண்டிருக்கிறது. உயர்வு: தற்போது வரத்து குறைவால், தட்டுப்பாடு காரணமாக வெங்காய விலை கிலோவிற்கு 24 - 27 ரூபாய் வரை விற்கிறது. தமிழகத்தில் தற்போது கரீப் பருவ வெங்காயம் நடவு செய்யப்படுகிறது. இவை செப்.,.அக்., அறுவடைக்கு வரும். அது வரை வெங்காயத்தின் விலை உயரும். விவசாயத்துறை அதிகாரி ஒருவர் கூறுகையில்,"" அடுத்த மாதம் வெங்காயம் அறுவடைக்கு வரும். இதனால், வரத்து அதிகரித்து, விலை கிலோவிற்கு 15- 20 ரூபாய் வரை குறைய வாய்ப்புள்ளது," என்றார்.

**வெங்காய வரத்து குறைந்ததால் தமிழகத்தில் விலை உயர்வு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 25,2011,23:34 IST

சிவகங்கை : தமிழகத்திற்கு வெங்காய வரத்து குறைவால், கிலோ 27 ரூபாய்க்கு விற்கிறது. அடுத்த மாதம் வரத்து அதிகரித்து 20 ரூபாய் வரை குறையும் என விவசாயத்துறையினர் தெரிவிக்கின்றனர். கடந்த ஆண்டு 0.35 லட்சம் எக்டேரில், சின்ன வெங்காயம் பயிரிடப்பட்டன. 3.40 லட்சம் டன் உற்பத்தியானது. கர்நாடக மாநில வெங்காய வரத்தை பொறுத்து தான் தமிழக சந்தைகளில் வெங்காய விலை நிர்ணயிக்கப்படுகிறது. தற்போது, கர்நாடகாவிலிருந்து தமிழகத்திற்கு வெங்காய வரத்து குறைந்துள்ளது. இருப்பில் உள்ள வெங்காயம் மட்டுமே விற்பனைக்கு வந்து கொண்டிருக்கிறது. உயர்வு: தற்போது வரத்து குறைவால், தட்டுப்பாடு காரணமாக வெங்காய விலை கிலோவிற்கு 24 - 27 ரூபாய் வரை விற்கிறது. தமிழகத்தில் 0.35 எக்டேரில் தற்போது கரீப் பருவ வெங்காயம் நடவு செய்யப்படுகிறது. இவை செப்.,.அக்., அறுவடைக்கு வரும். அது வரை வெங்காயத்தின் விலை உயரும். விவசாயத்துறை அதிகாரி ஒருவர் கூறுகையில்,"" அடுத்த மாதம் வெங்காயம் அறுவடைக்கு வரும். இதனால், வரத்து அதிகரித்து, விலை கிலோவிற்கு 15- 20 ரூபாய் வரை குறைய வாய்ப்புள்ளது," என்றார்.

**விவசாயிகளிடம் நேரடி தேங்காய் கொள்முதல் இரண்டு மாதத்தில் ரூ.40 லட்சம் வர்த்தகம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 25,2011,23:36 IST

பொள்ளாச்சி : பொள்ளாச்சி கூட்டுறவு விற்பனை சங்கத்தில், விவசாயிகளிடம் இருந்து வெளிமார்க்கெட் விலைக்கு நேரடியாக தேங்காய் கொள்முதல் செய்யப்படுகிறது. பொள்ளாச்சி கூட்டுறவு விற்பனை சங்கம் (பி.சி.எம்.எஸ்.,) வெளிமார்க்கெட் நிலவரத்துக்கு ஏற்ப விவசாயிகளிடம் நேரடி தேங்காய் கொள்முதலை ஜூலையில் துவங்கியது. வெளிமார்க்கெட்டில் தேங்காய் எண்ணெய் விலைக்கு ஏற்ப கொப்பரை, தேங்காய்க்கு விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. தற்போது பறித்து உரிக்கப்பட்ட தேங்காய் டன்னுக்கு 16 ஆயிரத்து 500 முதல் 18 ஆயிரம் ரூபாய் வரை விலை கிடைக்கிறது. அதற்கேற்ப தேங்காய்க்கு விலை நிர்ணயம் செய்து, விவசாயிகளிடம் கொள்முதல் செய்கின்றனர். பொள்ளாச்சி கூட்டுறவு விற்பனை சங்க தனி அலுவலர் ராதாகிருஷ்ணன், விற்பனை அபிவிருத்தியாளர் தங்கவேல் கூறியதாவது: விவசாயிகள் பறித்து வைத்திருக்கும் தேங்காய்க்கும், மரத்தில் இருந்து பறித்துக்கொள்வதற்கும் வெளிமார்க்கெட் விலைக்கு ஏற்ப தனித்தனியாக விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. விவசாயிகளே நேரடியாக தேங்காயை விற்பனை செய்யும்போது இடைத்தரகர்கள்

தவிர்க்கப்பட்டு, தேங்காய்க்கு உரிய விலை கிடைக்கும். விவசாயிகள் போனில் தகவல் தெரிவித்தால், மரத்தில் இருந்து தேங்காய் பறிப்பதற்கு ஆள் அனுப்புகிறோம். கொள்முதல் செய்த தேங்காயை உரித்து டன் கணக்கில் விற்பனைக்கு அனுப்புகிறோம். விவசாயிகளுக்கு உடனடியாக பணம் பட்டுவாடா செய்யப்படுகிறது. மார்க்கெட்டில் விலை உயர்ந்த பின் விற்பனை செய்ய நினைக்கும் விவசாயிகள் தேங்காயை இருப்பு வைக்கவும் வசதி செய்யப்பட்டுள்ளது. தேங்காய் இருப்பு வைக்கும் விவசாயிகள் பொருளீட்டுக்கடன் பெற்றுக்கொள்ளலாம்.

கடந்த இரண்டு மாதங்களில் 200 டன் தேங்காய் விற்பனை செய்யப்பட்டுள்ளது; 40 லட்சம் ரூபாய்க்கு வர்த்தகம் நடந்துள்ளது, என்றனர்.

## ***வெங்காயம், உருளைக்கிழங்கு விலை உயர்வால் உணவு பொருள் பணவீக்கம் 9.80 சதவீதமாக உயர்ந்தது***



*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*

*புதுடெல்லி*

*உணவு பொருள் பணவீக்கம் ஆகஸ்டு 13–ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில் 9.80 சதவீதமாக உயர்ந்துள்ளது. மொத்த விலைக் குறியீட்டு எண் அடிப்படையில் கணக்கிடப்படும்*

இப்பணவீக்கம் முந்தைய வாரத்தில் 9.03 சதவீதமாக இருந்தது. இதனுடன் ஒப்பிடும்போது உணவு பொருள் பணவீக்கம் தற்போது 0.77 சதவீதம் அதிகரித்து இரட்டை இலக்க அளவை எட்டியுள்ளது. வெங்காயம், உருளைக்கிழங்கு, பழங்கள் விலை மிகவும் உயர்ந்துள்ளதே இதற்கு காரணமாகும்.

முட்டை – மீன்

கணக்கீடு செய்வதற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வாரத்தில், ஓர் ஆண்டு கால அடிப்படையில் வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு விலை முறையே 44.42 சதவீதம் மற்றும் 16.39 சதவீதம் உயர்ந்துள்ளது. பழங்கள் மற்றும் பால் விலை முறையே 27.01 சதவீதம் மற்றும் 9.51 சதவீதம் அதிகரித்துள்ள நிலையில், முட்டை, மீன், இறைச்சி உள்ளிட்ட அசைவ உணவு பொருள்கள் விலை 13.37 சதவீதம் உயர்ந்துள்ளது. காய்கறி மற்றும் தானியங்கள் விலை முறையே 6.52 சதவீதம் மற்றும் 5.22 சதவீதம் அதிகரித்துள்ளது.

அதேசமயம், பருப்பு வகைகள் மற்றும் கோதுமை விலை முறையே 5.56 சதவீதம் மற்றும் 2.80 சதவீதம் குறைந்துள்ளது.

கணக்கீடு செய்வதற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வாரத்தில், எண்ணெய் வித்துக்கள், கனிமங்கள் தொடர்பான உணவு சாரா பொருள்கள் பணவீக்கம் 16.07 சதவீதத்திலிருந்து 17.80 சதவீதமாக உயர்ந்துள்ளது.

வட்டி விகிதங்கள்

உணவு பொருள்கள் உள்ளிட்ட அத்தியாவசிய பொருள்கள் பணவீக்கம் 11.64 சதவீதத்திலிருந்து 12.40 சதவீதமாக உயர்ந்துள்ளது. பொது பணவீக்கத்தை கணக்கிடுவதில் இதன் பங்களிப்பு 20 சதவீதமாக உள்ளது. கடந்த ஜூலை மாதத்தில் பொது பணவீக்கம் 9.22 சதவீதமாக இருந்தது.

பணவீக்கத்தை கட்டுப்படுத்தும் வகையில், பாரத ரிசர்வ் வங்கி கடந்த 2010 மார்ச் மாதத்திலிருந்து இதுவரை முக்கிய கடன்களுக்கான வட்டியை 11 முறை உயர்த்தி உள்ளது.

இதனால், மோட்டார் வாகனங்கள் விற்பனை வளர்ச்சி வேகம் குறைந்துள்ளது. தொழில்துறை உற்பத்தி வளர்ச்சியிலும் இது தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது.

இந்நிலையில், உணவு பொருள் பணவீக்கம் தற்போது உயர்ந்துள்ளதால், ரிசர்வ் வங்கி செப்டம்பர் மாதம் வெளியிடும் பணக் கொள்கை ஆய்வு அறிக்கையில் முக்கிய கடன்களுக்கான வட்டி விகிதங்களை மேலும் உயர்த்த வாய்ப்புள்ளது என சில பொருளியல் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

## வீணாகும் காய்கறிகள், பழங்களால் பெரும் இழப்பு உணவு பதப்படுத்துதல் துறையின் வளர்ச்சி திருப்திகரமாக இல்லை



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

வீணாகும் காய்கறி, பழங்களால் ஆண்டுதோறும் ரூ.50,000 கோடி இழப்பு ஏற்படுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது. நம் நாட்டில் உணவு பதப்படுத்துதல் துறையில் போதுமான வளர்ச்சி இல்லாததே இதற்கு காரணம் என வேளாண் துறைக்கான பாராளுமன்றக் குழு ஒன்று கவலை தெரிவித்துள்ளது.

பின்தங்கிய நிலை

உணவு பதப்படுத்துதல் துறைக்காக மத்தியில் தனி அமைச்சகம் உள்ளது. இருபது ஆண்டுகளுக்கு மேலாக இந்த அமைச்சகம் செயல்பட்டு வந்தாலும், பிற நாடுகளுடன் ஒப்பிடுகையில் நம் நாட்டில் இத்துறை மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளது. சேமிப்புக் கிடங்குகள் மற்றும் குளிர்பதனக் கிடங்குகளை போதிய அளவிற்கு இல்லாததே இதற்கு காரணமாகும்.

அமெரிக்காவில் உற்பத்தியாகும் வேளாண் விளைபொருள்களில் 65 சதவீதம் முறையாகப் பதப்படுத்தப்பட்டு விடுகிறது. பிலிப்பைன்ஸ் நாட்டில் 78 சதவீத விளைபொருள்கள் பதப்படுத்தப்படுகின்றன. நமக்கு நேரடிப் போட்டியாக விளங்கும் சீனாவில் 23 சதவீத உணவுப் பொருள்கள் பதப்படுத்துகின்றனர். அதே சமயம் இந்தியாவில் உற்பத்தியாகும் மொத்த வேளாண் விளைபொருள்களில் 2.5 சதவீதம்தான் பதப்படுத்தப்படுகிறது. போதிய கட்டமைப்புகள் இல்லாததால் உற்பத்தியாகும் காய்கறிகள் மற்றும் பழங்களில் 35 சதவீதம் வீணாகி விடுவதாக தெரிய வந்துள்ளது. இதன் மதிப்பு ரூ.50,000 கோடி என்ற அதிர்ச்சித் தகவலை பாராளுமன்றக் குழு வெளியிட்டுள்ளது.

*கடல் உணவு பொருள்கள்*

*நம் நாட்டில் கடல் உணவுப் பொருள்களில் 26 சதவீதமும், கோழி இறைச்சி 6 சதவீதமும், மாட்டிறைச்சி 20 சதவீதமும் பதப்படுத்தப்படுகின்றன. வளர்ச்சியடைந்த நாடுகளில் இந்தப் பொருள்கள் சராசரியாக 60 முதல் 70 சதவீதம் வரை பதப்படுத்தப்பட்டு விடுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.*

*உணவு பதப்படுத்துதல் துறையில் ஏற்பட்டுள்ள பின்னடைவால், கடல் உணவுப் பொருள்கள், இறைச்சி, காய்கறிகள், பழங்கள் ஏற்றுமதியிலும் கடும் பாதிப்பு ஏற்படுகிறது. இத்துறை தகுந்த வளர்ச்சி பெற்றால் வேளாண் விளைபொருள்கள் ஏற்றுமதி அபார வளர்ச்சி காண வாய்ப்புள்ளது. தற்போது சர்வதேச அளவில் மேற்கொள்ளப்படும் பதப்படுத்துதல் உணவுப் பொருள்கள் ஏற்றுமதியில் இந்தியாவின் பங்களிப்பு 1.5 சதவீதம் என்ற அளவில் மிகவும் குறைவாக உள்ளது.*

*கடந்த 5 ஆண்டுகளில்...*

*கடந்த 5 ஆண்டுகளில் உணவு பதப்படுத்துதல் துறை சராசரியாக 13.5 சதவீத வளர்ச்சி கண்டுள்ளது. இதே காலத்தில் பொருள்களை பதப்படுத்தும் அளவு 20 சதவீதத்திலிருந்து 26 சதவீதமாக உயர்ந்துள்ளது. மேலும் வீணாகும் பொருள்களின் அளவு 35 சதவீதத்திலிருந்து 30 சதவீதமாக குறைந்துள்ளது என மத்திய உணவுப் பதப்படுத்துதல் துறை அமைச்சம் தெரிவித்துள்ளது.*

## காலநடைகளை தாக்கும் கோமாரி நோயால் ரூ.18,000 கோடி இழப்பு



*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*

*புதுடெல்லி*

*இந்தியாவில், கால்நடைகளைக் தாக்கும் கோமாரி நோயால் ஆண்டுதோறும் ரூ.18,000 கோடி இழப்பு ஏற்படுவதாக அதிர்ச்சித் தகவல் வெளியாகி உள்ளது.*

*பயங்கர நோய்*

*பிளவுபட்ட பாத அமைப்பினை உடைய ஆடு, மாடு போன்ற விலங்குகளை தாக்கும் கோமாரி ஒரு பயங்கர நோயாகும். இந்த நோயால் பாதிக்கப்படும் மாடு ஒன்றால் சரிவர பால் தர இயலாது. இனப்பெருக்கம் செய்யவும் இயலாது. கோமாரியால் தாக்குண்ட விலங்கு ஒன்றின் பால் அல்லது இறைச்சி பயன்பாட்டுக்கு ஏற்றவை அல்ல. இதனால் நோயுற்ற விலங்கின் உரிமையாளருக்கு நஷ்டம் ஏற்படுகிறது. கோமாரி நோயால் தாக்குண்ட விலங்குகள் தரும் பால் மற்றும் இறைச்சியை ஏற்றுமதி செய்ய தடை விதிக்கப்பட்டுள்ளது. கால்நடை விஞ்ஞானிகளைப் பொறுத்தவரை இந்த நோய் இன்னும் ஒரு பெரிய சவாலாகவே உள்ளது.*

*இது குறித்து ஐ.சி.ஏ.ஆர். அமைப்பின் துணை இயக்குனர் (பொது விலங்கின அறிவியல்) கூறுகையில், "எமது அமைப்பு அண்மையில் மேற்கொண்ட ஆய்வின்படி கால்நடைகளை தாக்கும் கோமாரியால் நேரடியாக ஆண்டுக்கு ரூ.18,000 கோடி இழப்பு ஏற்படுகிறது. மறைமுகமாக ரூ.35,000 கோடி நஷ்டம் ஏற்படுகிறது. கோமாரி நோய் ஒழிப்பு நடவடிக்கைகளுக்காக, நடப்பு பதினோராவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் (2007–2012) மத்திய அரசு ரூ.1,200 கோடி ஒதுக்கியுள்ளது. 12–வது ஐந்தாண்டு திட்ட காலத்தில் இதற்காக ரூ.4,000 கோடி நிதி உதவி கோர முடிவு செய்துள்ளோம்" என்று தெரிவித்தார்.*

*பால் – இறைச்சி*

*கோமாரி, நீல நாக்கு போன்ற கால்நடை நோய்களால் ஏற்படும் இழப்பைக் கருத்தில் கொண்டு இந்த நோய்களை ஒழிப்பதற்கான பல்வேறு ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை ஐ.சி.ஏ.ஆர். போன்ற அமைப்புகள் மேற்கொண்டு வருகின்றன. இந்த முயற்சிகளுக்கு ஓரளவு வெற்றியும் கிடைத்துள்ளது.*

*கால்நடைகளை தாக்கும் நோய்கள் ஒழிக்கப்பட்டால் பால், இறைச்சி உற்பத்தி பன்மடங்கு அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த வகையில் ரின்டர்பெஸ்ட் என்ற நோய் ஒழிக்கப்பட்டதால் பால் உற்பத்தி 2–3 மடங்கும், இறைச்சி உற்பத்தி 17 மடங்கும் அதிகரித்துள்ளது.*

## *குன்னூரில் லாரிகள் வேலை நிறுத்தம் காரணமாக ரூ.25 கோடி மதிப்புள்ள தேயிலை தூள் தேக்கம்*

*குன்னூர், ஆக.26–*

*குன்னூரில் லாரிகள் வேலை நிறுத்தம் காரணமாக ரூ.25 கோடி மதிப்பிலான தேயிலை தூள் தேக்கம் அடைந்துள்ளது.*

*2 ஏல மையங்கள்*

*குன்னூரில் கூட்டுறவு தேயிலை ஏல மையம் குன்னூர் தேயிலை வர்த்தகர் அமைப் பின் சார்பில் நடத்தப்படும் ஏல மையம் ஆகிய 2 ஏல மையங்கள் உள்ளன. இந்த ஏல மையங் களில் விற்பனை யாகும் தேயிலை தூள் வட மாநிலங்களுக்கும், தென் மாநிலங்களுக்கும் லாரிகள் மூலம் கொண்டு செல்லப்படு கிறது.*

*மேலும் வெளிநாட்டு வர்த் தகர்கள் வாங்கும் தேயிலை தூள் துறைமுகங்கள் மூலமாக ஏற்றுமதி செய்யப்படுகிறது. துறைமுகங்களுக்கும் லாரிகள் மூலமாக தேயிலை தூள் கொண்டு செல்லப்படுகிறது.*

*கடந்த 18–ந் தேதி பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழகம் மற்றும் 6 மாநிலங் களில் உள்ள லாரி உரிமை யாளர்கள் வேலை நிறுத்தத் தில் ஈடுபட்டு வந்தனர். இந்த வேலை நிறுத்தம் நேற்றுமுன் தினம் முதல் முடிவுக்கு வந்தது.*

*குன்னூரில் வேலை நிறுத்தம்*

*அதே நேரத்தில் குன்னூரில் இருந்து தேயிலை பாரம் ஏற்றி செல்லும் லாரிகள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு உள் ளன. டீசல் விலை உயர்வு, இன்சூரன்ஸ் கட்டண உயர்வு, லாரிகளின் உதிரிபாகங்கள் விலை உயர்வு இவைகளின் காரணமாக தேயிலை பாரம் ஏற்றி செல்லும் லாரிகளுக்கு வாடகை உயர்வு தர வேண்டும் என்ற கோரிக்கைகளை குன் னூரில் உள்ள தேயிலை பாரம் ஏற்றி செல்லும் லாரி உரிமை யாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.*

*வாடகை உயர்வு குறித்து குன்னூர் லாரி உரிமையாளர் சங்க நிர்வாகிகளுக்கும், ரோடு டிரான்ஸ்போர்ட் சங்க நிர்வாகிகளுக்கும் நடைபெற்ற பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்தது. இதனால் தேயிலை பாரம் ஏற்றி செல்லும் லாரிகள் வேலை நிறுத்தம் காரணமாக தேயிலை குடோன்களில் ரூ. 25 கோடி மதிப்புள்ள தேயிலை தூள் தேக்கம் அடைந்துள் ளது. இதன் காரணமாக தேயிலை தொழில் கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளது.*

*9 சதவீதம்*

*இது குறித்து ரோடு டிரான்ஸ் போர்ட் சங்க செயலாளர் சேகர் கூறிய தாவது:–*

*லாரி உரிமையாளர் சங்கத் திற்கும், ரோடு டிரான்ஸ் போர்ட் சங்கத்திற்கும் வாடகை உயர்வு குறித்து பேச்சுவார்த்தை நடைபெற் றது.எங்கள் தரப்பில் 9 சதவீதம் வரை உயர்த்தி தர முன் வந்தோம். ஆனால் லாரி உரிமையாளர்கள் இதனை ஏற்று கொள்ளவில்லை. இதனால் லாரிகள் வேலை நிறுத்தம் நீடித்து வருகிறது.*

*தற்போது அன்றன்று உள்ள மார்க்கெட் நிலவரப்படி வாடகை நிர்ணயம் செய்தால் நிரந்தர தீர்வு ஏற்படும் என்று சங்கம் தரப்பில் கூறியுள் ளோம். இது குறித்து தேயிலை வாரியத்திற்கும், குன்னூர் போலீஸ் துணை சூப்பிரண்டிற் கும் தகவல் தெரியபடுத்தி உள்ளோம்.*

*இவ்வாறு அவர் கூறினார்.*

## *குன்னூர் டீசர்வ் ஏல மையத்தில் 80 சதவீத தேயிலை தூள் விற்பனை*

*குன்னூர், ஆக.26–*

*குன்னூர் டீசர்வ் ஏலத்தில் 80 சதவீத தேயிலை தூள் விற்பனையானது.*

*கூட்டுறவு தொழிற்சாலைகள்*

*நீலகிரி மாவட்டத்தில் 14 கூட்டுறவு தேயிலை தொழிற் சாலைகள் உள்ளன. இந்த*

*தொழிற்சாலைகளில் சிறு தேயிலை விவசாயிகள் உறுப் பினர்களாக உள்ளனர். இந்த தொழிற்சாலையில் உறுப்பின ராக உள்ள சிறு விவசாயிகள் வழங்கும் பச்சை தேயிலை மூலம் தேயிலை தூள் 15 தேயிலை தொழிற் சாலை களிலும் தயாரிக்கப்படு கிறது.*

*இவ்வாறு தயாரிக்கப்படும் தேயிலை தூள் குன்னூரில் உள்ள டீசர்வ் ஏல மையத்தில் வாரந்தோறும் புதன்கிழமை ஏலம் விடப்படுகிறது. விற் பனை எண் 33–க்கான ஏலம் நேற்றுமுன்தினம் நடைபெற் றது.*

*80 சதவீத விற்பனை*

*ஏலத்திற்கு மொத்தம் 4 லட்சத்து 74 ஆயிரத்து 963 கிலோ தேயிலை தூள் வந்தது. இதில் 2 லட்சத்து 93 ஆயிரத்து 574 கிலோ இலை ரகமாகவும், 1 லட்சத்து 84 ஆயிரத்து 389 கிலோ டஸ்ட் ரகமாகவும் இருந்தது.*

*ஏலத்தில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வர்த்தகர்கள் கலந்து கொண்டனர். இவர் கள் தரமான தேயிலை தூளை அதிகளவு வாங்கினர். இதன் காரணமாக தேயிலை தூளுக்கு 2 ரூபாய் முதல் 3 ரூபாய் வரை விலை உயர்வு ஏற்பட்டது.80 சதவீத தேயிலை தூள் விற்பனையானது. சராசரி விலையாக இலை ரகத்தின் சாதாரண வகை 47 ரூபாய் முதல் 52 ரூபாய் வரையிலும், விலை உயர்ந்த தேயிலை தூள் 68 ரூபாயில, இருந்து 70 ரூபாய் வரையிலும் ஏலம்சென்றதுடஸ்ட் ரகத்தின் சாதாரண வகை 50 ரூபாயில் இருந்து 55 ரூபாய் வரையிலும், விலை உயர்ந்த தேயிலை தூள் 68 ரூபாயில் இருந்து 72 ரூபாய் வரையிலும் விற்பனை ஆனது.*

தினகரன்

**உணவு பணவீக்கம் உயர்வு**

பதிவு செய்த நாள் : 8/26/2011 0:37:59



புதுடெல்லி : கடந்த 13ம் தேதியுடன் முடிந்த வாரத்தில் உணவு பணவீக்கம் 9.8 சதவீதமாக உயர்ந்துள்ளது. முந்தைய வாரத்தில் இது 9.03 சதவீதமாக இருந்தது. கடந்த ஆண்டின் இதே காலத்தில் இது 14.56 சதவீதமாக இருந்தது. அரசின் புள்ளி விவரப்படி, வெங்காயம் 13ம் தேதியுடன் முடிந்த வாரத்தில் கடந்த ஓராண்டுக்கு முன்பிருந்த விலையைவிட 44.42 சதவீதமும், உருளைக்கிழங்கு 16.39 சதவீதம் அதிகரித்துள்ளது. பழங்கள் 27 சதவீதமும், முட்டை, இறைச்சி மற்றும் மீன் ஆகியவை 13.37 சதவீதமும் உயர்ந்துள்ளது. பால் (9.5%), காய்கறிகள் (6.52%) விலையும் உயர்ந்துள்ளன. எனினும், பருப்பு வகைகள் (5.5%) கோதுமை (2.8%) ஆகியவற்றின் விலை சரிந்துள்ளன.

**குவிண்டாலுக்கு ரூ.500 குறைந்தது மஞ்சள் விலை மீண்டும் வீழ்ச்சி**

பதிவு செய்த நாள் : 8/26/2011 0:37:34



ஈரோடு : லாரி ஸ்டிரைக்கிற்கு பிறகு ஈரோட்டில் நேற்று தொடங்கிய மஞ்சள் மார்க்கெட்டிற்கு 2,408 மஞ்சள் மூட்டைகள் வரத்து இருந்தது. இதில் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் குவிண்டாலுக்கு 500 ரூபாய் வரை மஞ்சள் விலை வீழ்ச்சியடைந்துள்ளது. தென் மாநில லாரி உரிமையாளர்கள் சங்கத்தின் சார்பில் சுங்கவரியை குறைக்க வேண்டும் என்பன உட்பட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி கடந்த 18ம்தேதி நள்ளிரவு முதல் லாரிகள் வேலைநிறுத்தம் நடந்தது.

இந்த போராட்டத்தால் நாளொன்றுக்கு 10 கோடி ரூபாய் மதிப்பிலான மஞ்சள் மூட்டைகள் தேக்கமடைந்தது. இந்நிலையில் 23ம்தேதி இரவு முதல் வேலைநிறுத்த முடிவுக்கு வந்ததால் நேற்று முன்தினம் மஞ்சள் மார்க்கெட் நடைபெறவில்லை. 6 நாட்களுக்கு பிறகு மஞ்சள் மார்க்கெட் தொடங்கியதால் நேற்று ஒழுங்குமுறை விற்பனை கூடத்திற்கு 787 மஞ்சள் மூட்டைகள் விற்பனைக்கு கொண்டு வரப்பட்டதில் 622 மூட்டைகள் விற்பனையானது.

இதில் விரலி மஞ்சள் 4,149 ரூபாயில் இருந்து 5,740 ரூபாய் வரையும், கிழங்கு மஞ்சள் 4,050 ரூபாயில் இருந்து 5,199 ரூபாய் வரையும் இருந்தது. விரலி மஞ்சள் குவிண்டாலுக்கு 509 ரூபாயும், கிழங்கு மஞ்சள் 190 ரூபாய் வரையும் விலை குறைந்து காணப்பட்டது. வெளி மார்க்கெட்டை பொருத்தவரை நேற்று மஞ்சள் வரத்து குறைவாகவே காணப்பட்டது. 1,621 மூட்டைகள் வரத்து இருந்ததில் 300 மூட்டைகள் விற்பனையானது. இதில் விரலி மஞ்சள் 4,066 ரூபாயில் இருந்து 5,685 ரூபாய் வரையும், கிழங்கு 4,011 ரூபாயில் இருந்து 5,249 ரூபாய் வரையும் இருந்தது.

# மார்க்கெட் நிலவரம்

## சென்னை மார்க்கெட்

**சர்க்கரை**

வெளிச்சந்தை சர்க்கரை
ஒரு குவிண்டால் 2,950–3,000

**மணிலா பயறு**

80கிலோ கொண்ட மூட்டை
4,000–4,050

**கடலை எண்ணெய்**

ஒரு குவிண்டால் (வரி உள்பட)
9,850–00

**கடலை புண்ணாக்கு**

70 கிலோ மூட்டை
(சாக்கு வரிஉள்பட) 1,650–00

**தேங்காய் எண்ணெய்**

15 கிலோ கிராம் கொண்ட
டின்(வரிஉள்பட) 2,013–00

**நல்லெண்ணெய்**

குமரகுரு, திருமால், பிள்ளையார், சீனிவாசா, புவனேசுவரி, பெருமாள், பிருந்தாவனம் ஆகிய ரகங்கள்.
1குவிண்டால்(வரிஉள்பட) 10,500–00
டின் (15கிலோ) 1,750–00

**விளக்கெண்ணெய்**

ஒருகுவிண்டால் (வரிஉள்பட)
11,500.00
15கிலோடின் (வரிஉள்பட) 1,850–00

**சூரியகாந்தி எண்ணெய்**

சுத்திகரிக்கப்பட்டது 15கிலோ
டின் (வரிஉள்பட) 1,215.00

**ரீபைண்டு ஆயில்**

(சுத்திகரிக்கப்பட்ட எண்ணை)
15 கிலோ டின்(வரிஉள்பட) 1,635.00

**வனஸ்பதி**

டின் ஒன்றுக்கு (வரிஉள்பட)1,125.00

**பாமாயில்**

10 கிலோ டின் (வரி தனி)
570–00

## பருப்பு வகைகள் மார்க்கெட்

கோவை,ஆக.25–
கோவை டி.கே.மார்க்கெட் வியாபாரிகள் சங்கத்தில் பருப்பு வகைகள் விலை விவரம் வருமாறு:–

| பருப்புவகைகள் | 100கிலோ மூட்டை | ஒரு கிலோ |
|---|---|---|
| மஞ்சள் நெ.1 | ரூ. 9,000 | 95.00 |
| மல்லி (40கி) | ரூ. 3,200 | 90.00 |
| புளி (40கி) | ரூ. 3,200 | 85.00 |
| வரமிளகாய் (20கி) | ரூ. 2,080 | 110.00 |
| துவரம்பருப்பு | ரூ. 5,200 | 58.00 |
| க.பருப்பு (பாம்பே) | ரூ. 4,100 | 44.00 |
| உளுந்தம் பருப்பு (கருப்பு) | ரூ. 5,800 | 60.00 |
| உ.பருப்பு (வெள்ளை) | ரூ. 6,600 | 68.00 |
| தட்டைபயிறு | ரூ. 3,600 | 38.00 |
| மொச்சை பயிறு (அவரை) | ரூ. 3900 | 44.00 |
| வண்டல் கடலை | ரூ. 4000 | 32.00 |
| பொட்டுக்கடலை(54கி) | ரூ. 2,400 | 48.00 |
| நிலக்கடலை(80கி) | ரூ. 5,200 | 70.00 |
| பச்சைபயிறு | ரூ. 5,000 | 54.00 |
| கொள்ளு | ரூ. 1,700 | 20.00 |
| க.பருப்பு (டெல்லி) | ரூ. 3,900 | 41.00 |
| சர்க்கரை | ரூ. 3,100 | 32.00 |

## மற்ற மாநில பஞ்சு விலை

கோவை,ஆக.25–
கோவை, உப்பிலிபாளையம், காமராஜர் ரோடு, தென்னிந்திய பருத்தி பஞ்சாலை சங்கத்தின் மற்ற மாநில பஞ்சு விலை

(ஒரு குவிண்டாலுக்கு) விவரம் வருமாறு–

1. வி.797 22எம்.எம் ரூ. 6,749
2. ஜெயதார் (கர்நாடகா) ரூ. 7,311
3. ஜே 34 எஸ்.ஜி. 24 எம்.எம் (புதியது) ரூ. 10,769
4. எம்.இ.சி.எச் (மத்திய பிரதேசம் ரூ. 9,983
5. சங்கர் 6 28 எம்.எம். புதியது ரூ. 10,967
6. எம்.சி.யு. 5 32 எம்.எம். ரூ. 10,545
7. டி.சி.எச். 32 34 எம்.எம். (கர்நாடகா) புதுசு ரூ. 15,747

## கோவை உழவர் சந்தை

கோவை,ஆக.25–
கோவை ஆர்.எஸ்.புரம் கவுலி பிரவுன் ரோட்டில் உள்ள கோவை உழவர் சந்தையில் விற்பனை செய்யப்படும் காய்கறிகளின் விலை விவரம் வருமாறு:–

**காய்கறிகள் (கிலோவுக்கு)**

| | | |
|---|---|---|
| எலுமிச்சம்பழம் | ரூ. | 35–40 |
| கத்தரிக்காய் | ரூ. | 14–18 |
| வெண்டைக்காய் | ரூ. | 8–10 |
| நாட்டுத்தக்காளி | ரூ. | 5–7 |
| ஆப்பிள் தக்காளி | ரூ. | 5–7 |
| புடலை | ரூ. | 14–20 |
| பீர்க்கங்காய் | ரூ. | 12–18 |
| சுரைக்காய் | ரூ. | 13–15 |
| பாகற்காய் | ரூ. | 8–10 |
| கொத்தவரை | ரூ. | 12–16 |
| பூசணிக்காய் | ரூ. | 8–10 |
| அரசாணிக்காய் | ரூ. | 7–8 |
| மேரக்காய் | ரூ. | 12–16 |
| பச்சை மிளகாய் | ரூ. | 12–24 |
| குண்டு மிளகாய் | ரூ. | 26–00 |
| சின்னவெங்காயம் | ரூ. | 16–20 |
| பெரியவெங்காயம் | ரூ. | 20–21 |
| இஞ்சி | ரூ. | 36–00 |
| முருங்கைக்காய் | ரூ. | 12–16 |
| உருளைக்கிழங்கு | ரூ. | 18–20 |
| சேனைகிழங்கு | ரூ. | 25–00 |
| கருணைகிழங்கு | ரூ. | 40–00 |
| சேப்பங்கிழங்கு | ரூ. | 22–00 |
| மரவள்ளிகிழங்கு | ரூ. | 14–00 |
| சக்கரவள்ளிகிழங்கு | ரூ. | 14–00 |
| சிறுகிழங்கு | ரூ. | 18–22 |
| முள்ளங்கி | ரூ. | 12–15 |
| கேரட் (ஊட்டி) | ரூ. | 20–24 |
| பீட்ரூட் (ஊட்டி) | ரூ. | 16–20 |
| நூல்கோல் | ரூ. | 18–20 |
| கொத்தமல்லி | ரூ. | 20–24 |
| ட்ரினிப்ஸ் | ரூ. | 22–00 |
| முட்டைகோஸ் | ரூ. | 10–12 |
| கலர்கோஸ் | ரூ. | 14–00 |
| புதினா | ரூ. | 16–00 |

| | | |
|---|---|---|
| காலிப்பிளவர் | ரூ. | 18–20 |
| பொறியல் தட்டை | ரூ. | 14–18 |
| தேங்காய் | ரூ. | 6–14 |
| பட்டாணி | ரூ. | 60–100 |
| கறிவேப்பிலை | ரூ. | 12–14 |
| அகத்தி | ரூ. | 10–12 |
| வாழைக்காய் | ரூ. | 20–00 |
| குடைமிளகாய் | ரூ. | 28–32 |
| சாதா பீன்ஸ் | ரூ. | 17–20 |
| டபுள்பீன்ஸ் | ரூ. | 50–00 |
| கறிபீன்ஸ் | ரூ. | 17–20 |
| புஷ்பீன்ஸ் | ரூ. | 18–24 |
| காளான் | ரூ. | 80–140 |
| இளநீர் (ஒன்று) | ரூ. | 11–14 |
| மாங்காய் | ரூ. | 14–20 |
| திராட்சை | ரூ. | 50–00 |
| சப்போட்டா 1கிலோ | ரூ. | 18–00 |
| கொய்யா1கிலோ | ரூ. | 20–00 |
| மாதுளை1கிலோ | ரூ. | 80–90 |
| பப்பாளி 1 கிலோ | ரூ. | 17–00 |
| வரமிளகாய் | ரூ. | 90–00 |
| மாம்பழம் | ரூ. | 20–40 |
| ஆப்பிள் | ரூ. | 110–90 |
| சாத்துக்குடி | ரூ. | 36–00 |
| நெல்லிக்காய் | ரூ. | 32–00 |
| ஆரஞ்சு | ரூ. | 75–00 |
| வெள்ளரி | ரூ. | 12–28 |
| புளி 1 கிலோ | ரூ. | 75–80 |
| பஜ்ஜிமிளகாய் | ரூ. | 28–32 |
| அவரை | ரூ. | 12–18 |
| நிலக்கடலை | ரூ. | 26–32 |
| மக்காச்சோளம் | ரூ. | 18–24 |

## வயநாடு மார்க்கெட்

வயநாடு மார்க்கெட்டில் நேற்றைய நிலவரப்படி (குவிண்டாலுக்கு) விலை விவரம் வருமாறு:–

| | |
|---|---|
| மிளகு (நாடன்) | ரூ. 27700 |
| மிளகு (சேட்டன்) | ரூ. 28,000 |
| மிளகு (வயநாடன்) | ரூ. 28,200 |
| கொட்டைபாக்கு (புதியது) | ரூ. 12,000 |
| கொட்டைபாக்கு (பழையது) | ரூ. 13,000 |
| சுக்கு (புதியது) | ரூ. 12000 |
| சுக்கு(பழையது) | ரூ. 10,100 |
| ஏலக்காய் (வெள்ளை) | ரூ. 1000 |
| ஏலக்காய் (பச்சை) | ரூ. 1200 |
| தேங்காய் எண்ணை(100 லிட்டர்) | ரூ. 9650 |
| கொப்பரை நாடன் | ரூ. 6125 |
| கொப்பரை ராசு | ரூ. 6075 |
| கொப்பரை தில்பசன் | ரூ. 6275 |
| கொப்பரை ராஜிப்பூ | ரூ. 8100 |
| உருண்டை கொப்பரை | ரூ. 7450 |
| ரப்பர் ஆர்.எஸ்.5 | ரூ. 19000 |
| ரப்பர் ஆர்.எஸ்.4 | ரூ. 19850 |
| ரப்பர் பால் | ரூ. 12950 |
| காப்பி | ரூ. 10750 |
| உருண்டைகாப்பி (52 கிலோ) | ரூ. 3150 |
| நேந்திரகாய் | ரூ. 2600 |
| இஞ்சி | ரூ. 1450 |

## எண்ணை மார்க்கெட்

கோவை,ஆக.25–
கோவை சமையல் எண்ணை வியாபாரிகள் சங்கத்தில் நேற்றைய எண்ணை விலை விவரம் வருமாறு–

| எண்ணை வகை | (15கிலோ) | (1லிட்டர்)சில்லறை விலை |
|---|---|---|
| ரீபைண்ட் ஆயில் | | |
| கணபதி பிராண்ட் | ரூ.1,680 | 108.00 |
| கோல்டன் சன் பிராண்ட் | ரூ.1190 | 76.00 |
| சன் பிளவர் ஆயில் | | |
| கோல்டு வின்னர் பிராண்ட் | ரூ.1260 | 80.00 |
| பருத்தி விதை எண்ணை | | |
| ஜி.ஆர்.பிராண்ட் | ரூ.1100 | —— |
| அரிசி தவிடு எண்ணை | | |
| பூர்ணாபிராண்டு | ரூ.1220 | 77.00 |
| நல்லெண்ணை | | |
| காந்திமதி பிராண்ட் | ரூ. 1,400 | 100.00 |
| தேங்காய்எண்ணை | ரூ. 1600 | 110.00 |
| என்.கே.என்பிராண்ட் | ரூ. 1,850 | 120.00 |
| பாம் ஆயில் | | |
| ருசிபிராண்டு | ரூ. 1,080 | 60.00 |
| கடலைஎண்ணைவள்ளல்பிராண்டு | ரூ. 1,570 | 102.00 |
| வனஸ்பதி | | |
| லில்லி பப்ஸ் பிராண்ட் | ரூ. 1,260 | – |
| கிரேட் செப் பிராண்ட் | ரூ. 1010 | – |
| அபிராமிபிராண்டு | ரூ. 1,050 | – |
| சாரதா பிராண்ட் | ரூ. 1,050 | – |

### பட்டுக்கூடு

| மஞ்சள் கலப்பினம் | | வெள்ளை கலப்பினம் | |
|---|---|---|---|
| அதிகபட்சவிலை | ரூ.200.00 | அதிகபட்சவிலை | ரூ.276.00 |
| சராசரி விலை | ரூ.147.26 | சராசரி விலை | ரூ.248.56 |
| குறைந்தபட்சவிலை | ரூ.135.00 | குறைந்தபட்சவிலை | ரூ.215.00 |

**பட்டு நூல் ரூ.1,730**

## தங்கம் மார்க்கெட் நிலவரம்

| தங்கம் | சென்னை | கோவை | திருப்பூர் |
|---|---|---|---|
| 22 காரட்(1 பவுன்) | 19,432.00 | 19,432.00 | 19,600.00 |
| ஒரு கிராம் | 2,429.00 | 2,429.00 | 2,450.00 |
| **வெள்ளி** | | | |
| 1 கிலோ | 60,180.00 | 64,400.00 | 69,500.00 |
| ஒரு கிராம் | 64.40 | 64.40 | 64.50 |